யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

# லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை


பேராசிரியர்

ப. சந்திரசேகரம்

தலைவர்

கல்வித்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.


# Lady Lilavati Ramanathan MEMORIAL LECTURE


**Professor**

**P. Chandrasegaram**

[redacted]

University of Jaffna, Sri Lanka.


31 August 1987

1987. ஆகஸ்ட் 31


370 ·95489 CAM PB


# லீலாவதி இராமநாதன் பெருமாட்டி

சேர் பொன்னம்பலம் இராமநாதன் சிறந்த அரசியல் வாதியாகவும், கல்விமானுகவும், சமயப்பற்றுள்ளவராக வும், கலை கலாசாரத்தைப் பேணி வளர்ப்பவராக வும் விளங்குவதற்கு மனையறத்தின் வேரனையராக விளங்கியவர், பெருமாட்டி லீலாவதி இராமநாதன் ஆவர். அவருடைய உயர்ந்த இலட்சியங்களும், கொள்கைகளும் அவருடைய துணைவியாரால் நிறைவு பெற்றன. ஒருவர் புகழுடனும், சகல சிறப்புகளுட னும் விளங்குவதற்கு மாண்புமிக்க இல்லாள் கார ணம் என்றால் மிகையில்லை. ஒரு நாட்டிற் பிறந்து வேறு ஒரு நாட்டில் வளர்ந்து இறுதியாக இலங்கை வாழ் சைவமக்களுடைய முன்னேற்றத்துக்காகப் பணி யாற்றிய பெருமை அம்மையாருக்குரியது.

இங்கிலாந்தில் யோக்சயர் என்ற இடத்தைச் சேர்ந்த செல்வி R. L. ஹரிசனுடைய முன்னோர், 19-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அவுஸ்திரேலியா விற் குடியேறி வாழ்ந்தனர். அவருடைய பெற்றோர் மிகவும் உயர்ந்த பண்பாடும் செல்வச் சிறப்பும் மிக்கவர்கள். செல்வி R. L. ஹரிசன் அவர்களுக்குப் பொருட் செல்வத்திலும் பார்க்க அருட்செல்வத்தில் அதிக நாட்டம் இருந்தது. சமயத்தை ஒப்பீட்டு முறையில் ஆராய்ந்து, உண்மையை அறியும் ஆர்வத்தால் ஞானிகளைத் தேடி, கீழைத்தேசங்களுக்கு வந்த செல்வி R.L. ஹரிசன், சேர் பொன். இராம நாதனைச் சந்தித்தார். சேர் பொன். இராமநாதனிடம் குரு சிஷ்ய முறையிற் சமயத்தைக் கற்க ஆரம்பித்து, முதலிலே விவிலிய நூலை ஆராய்ந்து சில நூல் களை வெளியிட்டார். வழமையாக மேற்கு நாட்டவர்களைக் கவரும் இந்து தத்து வம், சமய இலக்கியம், வடமொழி என்பன இவரையும் கவர்ந்ததில் வியப் பில்லை. நமது இந்துசமயக் கோட்பாடுகளைப் பிறநாட்டவர் போற்றிக் கைக் கொள்ளும் வண்ணம் சமய இலக்கியங்களை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்.

செல்வி R. L. ஹரிசனுடைய அறிவு, ஆற்றல், காரணமாக சேர் பொன். இராமநாதன், அம்மையாரைத் தமது அந்தரங்கச் செயலாளராக நியமித்தார். சேர் பொன். இராமநாதன் அவர்கள் சமயச் சொற்பொழிவாற்ற அமெரிக்கா

(தொடர்ச்சி பின் உள் அட்டையில்)



பரமேஸ்வரன் ஆலய முகப்புத் தோற்றம்

370.95493
CAN
AR
PB

யாழ்ப்பாணக் குடாநாட்டில்

இருபதாம் நூற்றுண்டில்

நிகழ்ந்த

# இந்து சமயக் கல்வி

# மறுமலர்ச்சி

P1184

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இந்து சமயத் தத்துவமும் கல்வியும் | 1 |
| 2. | பத்தொன்பதாம் நூற்றுண்டின் இந்து சமயக்கல்வி மறுமலர்ச்சி | 4 |
| 3. | இந்து சமயக் கல்விச் சிந்தனையாளர்களும் அவர்தம் பணிகளும் | 10 |
| 4 | சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் நோக்கும் செயற்பாடுகளும் | 17 |
| 5. | இராமகிருஷ்ண சங்கமும் கல்வி மறுமலர்ச்சியும் | 18 |
| 6. | இந்து சமயப் பண்பாட்டுப் புல்கலைக்கழகம் | 27 |
| 7. | இலவசக்கல்வியும் இந்து சமய மறுமலர்ச்சியும் | 28 |
| 8. | தேசிய மயமாக்கலும் இந்து சமயக் கல்வி நிறுவனங்களும் | 30 |
| 9. | மறுமலர்ச்சியின் தொடர்ச்சி | 31 |
| 10. | அடிக்குறிப்புகள் | 33 |
| 11. | பொதுநூற் பட்டியல் | 36 |

# தலைமையுரை

**பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன்**
துணைவேந்தர்

லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரையின் பொருட்டுக் கூடியிருக்கும் அவையோர்களே, பேராசிரியர்களே, விரிவுரையாளர்களே' மாணவர்களே, வணக்கம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களுடைய குடும்பத்துக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உண்டு. கல்வியறிவின் பெருக்கத்துக்கும் இந்து கலாசார அபிவிருத்திக்கும் சைவசமய வளர்ச்சிக்கும் அவர்கள் ஆற்றிய தொண்டுகள் ஒப்பற்றனவாகும். சென்ற ஆண்டு யான் நிகழ்த்திய் லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரையிலே இத் தொண்டுகள் பற்றி விரிவாக விளக்கியிருந்தேன். இவ்வாண்டு நினைவுப் பேருரையைப் பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்கள் நிகழ்த்தவுள்ளார்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருபதாம் நூற்றுண்டில் நிகழ்ந்த இந்து சமயக் கல்வி மறுமலர்ச்சி என்னும் பொருள் பற்றிப் பேராசிரியர் இப்பொழுது தமது உரையை நிகழ்த்துவார். இந்து சமய மறுமலர்ச்சி என்பது இராமநாதன் பெருமாட்டியாருக்கு மிகவும் பிடிப்பான ஒரு துறையாகும். இதுபற்றியதாக இந்நினைவுப் பேருரை அமைவது சாலவும் பொருத்தமானது.

போராசிரியர் சந்திரசேகரம் நமது பல்கலைக்கழகத்துக் கல்வியியற் புலத்தின் தலைவர். ''கல்வித் தத்துவம்'', 'கல்விச்சிந்தனைகள்' என்பன இரண்டும் அவருடைய கல்விக்கோட்பாடுகளைத் தெளிவுபட உணர்த்தும் நூல்களாகும். அவரது பரந்த விரிந்த தத்துவ நோக்கினை இந்த நூல்களில் நாம் தரிசிக்கிறோம். விபுலானந்த அடிகளாரின்வழி வந்து அவருடைய எண்ணங்களிலும் கொள்கைகளிலும் திளைத்த ஒருவராகையால் இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், காந்தியடிகள் ஆகியோரின்பாலும், பேராசிரியர் சந்திரசேகரும் நிறைந்த ஈடுபாடுடையவர்.

இந்த ஈடுபாடும் பற்றுறுதியும் அவர்தம் சிந்தனையிலும், எழுத்திலும், பேச்சிலும் விரவி நிற்பனவாம். அந்த வகையிலே இந்து சமய மறுமலர்ச்சி

பற்றிக் கல்வியியல் நோக்கிலே பயனுள்ள சிந்தனைகள் பலவற்றை அவர் இன்று வழங்குவார் என நாம் எதிர்பார்க்கிறோம்.

வேற்று நாட்டவர்களின் ஆட்சி இந்த நாட்டிலே வேரூன்றுவதற்கு முன்னர், சைவ சமயமே யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவியது. சிவபெருமான், விநாயகர், முருகன், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்குக் கோயிலமைத்து வழிபாடு நடைபெற்றது. திருமால், கண்ணகி, அண்ணமார், முத்துமாரி, பூதராயர், முதலான மூர்த்திகளுக்கும் பொங்கல், பூசைகள், வேள்விகள் நடைபெற்றன. இவ்வாறான தெய்வ வழிபாடு விரதங்களுடனும் விழாக்களுடனும் இரண்டறக் கலந்து நின்றது. சமயச் சடங்குகளோடு இணைந்து சிற்பம், சித்திரம், இசை, புராண படனம், வசந்தன்ஆட்டம், காவடி, கூத்து முதலிய கலைகளும் வளம்பெற்று ஓங்கின

ஆயினும் பிற நாட்டாரின் வருகைக்குப் பின்னர், வேறுவிதமான நடைமுறைகளும் நாகரிகங்களும் எண்ணப்போக்குகளும் இங்கு புகுந்து கொண்டன. இவற்றினை எதிர்கொள்ள வேண்டிய ஒரு நிலை நமது சமுதாயத்திலே தலைதூக்கலாயிற்று. இந்தச் சூழ்நிலையிலேதான், யாழ்ப்பாணப் பகுதியிலே சமய மறுமலர்ச்சி இயக்கங்கள் தோன்றலாயின. ஆறுமுகநாவலர் தொடங்கிய பணி, பின்னர் பல்வேறு கிளைவழிகளிலே படர்ந்து தொடர்ந்தது. அந்தத் தொடர்ச்சியிலே பல்கலைக்கழக நிலைப்பட்ட கல்வியும், பாடசாலைக் கல்வியும் கணிசமான மாற்றங்களுக்கு உள்ளாயின.

சுருங்கக் கூறின், சமய மறுமலர்ச்சியானது கல்வி மறுமலர்ச்சியுடன் நெருங்கிப் பிணைந்துள்ளது எனவே, இந்து சமய மறுமலர்ச்சி பற்றிய பேருரையினை எனது தலைசிறந்த மாணவர்களுள் ஒருவரும் கல்வியியற் புலத் தலைவருமாகிய பேராசிரியர் சந்திரசேகரம் நிகழ்த்துவது பெருமைக்குரியதும் பல்லாற்றானும் ஏற்புடையதுமாகும். தமது பேருரையினை நிகழ்த்துமாறு அவரை அன்புடன் அழைக்கிறேன்.

## 1. இந்துசமயத் தத்துவமும் கல்விமரபும் :

இந்து தருமம் தத்துவம், சமயம், தொன்மை பொருந்தியது; என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பது.

உலகக் கலாசார, பண்பாட்டு வளர்ச்சியில் நாம் அறிந்த ஐயாயிரம் ஆண்டுகளின் நாகரிக வளர்ச்சியில், எழுபது கோடி மக்கள் வாழ்ந்த, வாழ்கின்ற ஆன்மீக வாழ்வின் வடிவமே இந்து சமயத் தத்துவ மரபாகும் என்பது பிரெஞ்சு அறிஞரும், கீழைத்தேய ஞானிகளையிட்டு நூல்கள் எழுதி நோபல் பரிசு பெற்றவருமான ரொமெயின் ரோலந்து அவர்களின் கருத்தாகும்.

சத்தியம் ஒன்றே; ஞானிகள் அதைப்பல பெயரிட்டு வழங்குகின்றார்கள் என்பது இந்துசமய நெறி. உண்மை ஒன்று; வழிகள் பல என்பது இந்து தருமத்தின் உன்னத கோட்பாடு.[1]

இம்மரபு தத்துவ நிலையிலும், சமய நிலையிலும், அறிவியல் நிலையிலும் அமைகின்றது.

சமயமும், தத்துவமும் ஒன்றை ஒன்று நிறைவு செய்வன. இவை இரண்டும் இயைந்து இணையும் சிறப்பு இந்துப் பண்பாட்டுக்கே உரியது. இங்கு சமயம் பேசும் நிலையில் தத்துவமும், தத்துவம் பேசும் நிலையில் சமயமும் மாறிமாறி இணைந்து வருவதனால் ஒன்றை ஒன்று வளம்படுத்தி நிற்பதைக் காண்கின்றோம்.

மனிதன் தான் வாழ்கின்ற சமுதாயத்தோடும் பரம்பொருளோடும் இணைந்து வாழ்வதனால் அவன் ஆளுமை பெறுகின்றான். மக்களோடும், பரம்பொருளோடும் இணைந்து வாழ்கின்ற மனிதன் இயற்கையோடும் இணைந்து வாழ்வது முக்கியமாகின்றது. இவ்விலட்சியங்களை அடைவதற்குத் திட்டவட்டமான வழிமுறைகள் எவையுமில்லை. தன்னை ஆட்கொள்ளும் எந்த வழியையும் மக்கள் பின்பற்றலாம் என்பது இந்துசமய நீதி.

வெவ்வேறு விளக்குகளில் திரிகள் இடப்பட்டிருந்தாலும், திரிகள் எரியும்போது நமக்கு ஒரு ஒளியே கிடைக்கின்றதென, வங்கக் கவிஞர் இரவீந்திரநாத்தாகூர், இந்து தருமத்துக்கு விமர்சனம் தரும்பொழுது, இந்து சமயம் பன்மையில் ஒருமை காணும் தத்துவத்தைக் கொண்டது என்பது புலனாகின்றது. கல்வியின் சிறந்த நோக்கங்களுள் ஒன்று பன்மையில் ஒருமை காண்பதாகும்.

இந்து சமயம் அதனது, தத்துவ ஞானிகள், சிந்தனையாளர்கள், பக்தர்கள், சமய நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் கல்விச் சிந்தனையை உருவாக்கி அதனைச் செயல் ரூபமாக்கி, கல்வித் தத்துவத்தை வளம்படுத்தி வந்துள்ளது. பாரத நாட்டிலும், இந்து மக்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கங்கெல்லாம் இச்சமயக் கல்வி மரபு பொதுக் கல்வி மரபுக்கு உயிரூட்டி, புனரமைப்பு அளித்து, பலம் வாய்ந்த ஆத்மீக அறிவு வாய்ந்த சமூக கலாசார சாதனமாக விளங்கி வருகின்றது. இந்து சமயத்தினை நியமமாகத் தழு

வாத சிந்தனையாளர்களும், அறிவாளர்களும் இம்மரபின் சிந்தனைகளைக் கற்றுணர்ந்து, உலகக் கல்விச் சிந்தனையில் இந்துச் சிந்தனையின் பொருத்தப்பாடு சிறப்பிடம் கொள்வதாகக் கருதுகின்றார்கள்.

இம் மரபு ஒரு அனைத்துலகக் கண்ணோட்ட மரபு மட்டுமல்ல, அதனை மனிதகுலத்தின் முழுமை பொருந்திய, மறுமலர்ச்சியின் வித்தாகக் கொள்ளுதல் பொருத்தமென்று 'ஒருலகம்' காணவிளைந்த வரலாற்றுப்பேராசிரியர் ஆர்னல்ட் ரொயின்பி கொள்ளுவார்.[2] திருமூலர், 'ஒன்றே குலம்', 'ஒருவனே தேவன்' என்னும் நிறை தத்துவம் பொருந்திய கருத்தினை நமக்கு அளித்துள்ளார். ஐக்கிய அமெரிக்க கல்வியியற் பேராசிரியர், ரொபேட் யூலிக், இந்து மரபு ஈராயிரம் ஆண்டுக் கல்வி ஞானத்தின் வளர்ச்சி என்று கொள்வதும் நோக்கற்பாலது.

இந்து சமய வழி நின்று, அதன்வழி அமைதி, மகிழ்ச்சி, வாழ்க்கையில் ஒளி என்பவற்றைக் காண்பதற்கு மட்டுமன்றி இம்மரபின் கல்விச் சிந்தனை மூலமாக இலட்சிய வாழ்க்கை வாழ முடியும் எனும் காந்தியடிகளின் கருத்தும் குறிப்பிடத்தக்கதாகும்.

மனிதன் தோன்றிய காலம்தொட்டு, உலகிற் பல சமயங்கள் இருந்து வந்துள்ளன. உலகில், சமயத்தைப் போற்றி வளர்க்காத பல சமுதாயங்கள் உண்டு.

ஆனால், சமயப் பண்பிலிருந்து ஒரு சமுதாயம் என்றென்றும் விடுபட்டு வாழமுடியுமா எனும் வினா தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இந்துமக்கள் இறைவனைத் தந்தையாகவும், அன்னையாகவும் கொள்வர். ஆண் உருவின் வெளிப்பாடு சிவன் என்றும், பெண்ணுருவின் வெளிப்பாடு சக்தி என்றும் கொள்ளப்படுகின்றது. சிவனை நுண்ணறிவாகவும், சக்தியினை ஆற்றலாகவும் கொண்டு நுண்ணறிவு கருத்து ரூபத்தில் மட்டுமிராது, செயல்ரூபம் பெற்று, செயல் சார்ந்த வெளிப்பாட்டினைக் கொள்ளும் பொழுதுதான் அது அர்த்தம் பெறுகின்றது என்பது அறிஞர்களின் துணிவாகும்.

இறைவன் ஞான உருவன், அறிவு உருவன், அன்புருவன், கருணையுருவன் என்று சொல்லும்பொழுது, ஞானமும், அறிவும், அன்பும், கருணையும் ஒருமித்து இறைவன் ரூபம் பெறுகின்றான் எனக் கொள்பவர்கள் கல்வி ஞானத்தையும், அறிவையும் அன்பையும், கருணையையும் ஒன்றிணைத்து வளர்த்தல் வேண்டுமெனக் கொண்டு இறைவனுக்கும், கல்விக்குமிடையே ஒப்புமை காண்பார்கள்.

இந்து மரபு எல்லா மக்களும், தெய்வீகம் நிறைந்தவர்கள் என்று கொள்வது; மானிட உடல், இறைவனின் ஆலயமாகும். இதனை இருளில் வைத்திருத்தல் கூடாது; எனவே, மனிதனில் அறிவுச்சுடர் ஏற்றப்படுதல் வேண்டும் ; அறிவு விளக்கு ஏற்றப்படுதல் வேண்டுமெனக் கொள்ளும்.

இந்து சமயத்தத்துவம் நித்திய தத்துவமாகும் என்பது பிரித்தானிய, ஆங்கில தத்துவஞானி அல்டஸ் ஹக்ஸ்லியவர்களின் முடிவாகும்.[3]

உளவியல் வல்லுநர் உவில்லியம் ஜேம்ஸ், புயன்கொள் வாதக் கல்வித்தத்துவம் பாரதம் அளித்த வேதாந்தக் கல்விச் சிந்தனையில் உதித்தது எனும் கருத்தினை முன் வைத்துள்ளார்கள். ரொமெயின் ரோலந்து அவர்களும், இக்கருத்து ஆராயப்படவேண்டிய கருத்தெனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மனிதன் தன்னை அறிவதோடு தன்னை உணர்தலும் வேண்டும்; தன்னைப்பற்றிய அறிவினை மீட்டல் செய்தலும் வேண்டும் எனும் இந்துசமயக் கருத்து உளவியல், அறிவியல் சமூகவியற் கருத்துகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

ஞானம் இந்துதர்மக் கோட்பாட்டின் உயர்நிலையாகும். இந்துதர்மக் கல்வியானது சிந்தனை வழியையும், மெய்யறிவையும் வலியுறுத்தி வந்துள்ளது. இறைநிலை, உயர்நிலை இரண்டும் ஒன்றெனக் கருதுவது இந்துநெறி. இது, இறைவனையடையும் வழியை வகுப்பதே கல்விவழி என்று கொள்வது.[4]

கல்வி ஞானத்தை வளர்ப்பதோடு பக்தியையும், இரக்கவுணர்ச்சியையும் வளர்த்தல் வேண்டும்.

உண்மை, அழகு, நன்மை ஆகிய பண்புகளைக் கல்வி வளரச் செய்தல் வேண்டும். மனமானது வெளிப்பட்டுத் தோன்றுமிடத்து அறிவு, இச்சை, துணிவு என முத்திறப்பட்டு நிற்கும். அறிதல், இச்சித்தல், துணிதல் ஆகிய மூன்று செயல்களும், தெளிவு, இனிமை, உறுதி எனும் குணங்களை வளர்க்க ஏதுவாயிருக்கும்.

'உண்மை உணர்த்தும் நூல்கள் பூத, விஞ்ஞான நூல்களும், தருக்க நியாய தத்துவ நூல்களுமாகும்; அழகு உணர்த்துவன, இசையோவிய நூல்கள்; நன்மை உணர்த்துவன அறநூல்கள்'.[5]

கல்வி, பலவித உரிமைகளுக்கு நிலைக்களம் ஆதல் வேண்டும். பழைமை ஊற்றிலிருந்து புதுமை பொங்கி எழும் காட்சியைக் கவிதையாக ஆக்க வேண்டும். இதற்கு ஊடகம் மறுமலர்ச்சியாகும். மறுமலர்ச்சியென்பது மறுபிறப்பு; மக்கள் இதயத்திலே தோன்றும் புது உணர்ச்சி. இது உணர்ச்சி மட்டுமன்றி, ஆக்கமுமாகும். மறுமலர்ச்சி பழைய உலகத்தைப் போக்கிப் புது யுகத்தை வரவழைக்கின்றது.

நெடுங்காலமாக வெளியிற் புலப்படாதிருந்து, அமைதியாகப் பரவி, சமுதாயத்தை உள்ளூர இயக்கிவரும் பல சக்திகள் வேகங்கொண்டு முழு வன்மையோடு வெளிப்படும் நிலை மறுமலர்ச்சியாகும்.

மறுமலர்ச்சி, மக்கள் இருதயத்திலே தோன்றும் புதிய உணர்ச்சியும் மக்களை இயக்கும் ஆழ்ந்த உணர்ச்சியுமாகும். உணர்ச்சிக்குத் துணை புரிவது ஊக்கம், இதனடியில் சமுதாயம் முழுவதும் அதிர்ந்து, சமுதாயத்தின் உள்ளும், புறமும் புதைந்திருக்கும் சக்தியினை ஒரு வழிப்படுத்தி, புது நெறியாகத் தொனிக்கும்.

மறுமலர்ச்சியின் முக்கிய அம்சம் மனிதனை, மனிதன் என்ற நிலையிற் கொண்டு அவனது நிலையைப் பேணுவதாகும். மனிதனுக்கு மதிக்க முடியாத சக்தி மட்டுமல்ல,

விடுதலை உணர்வும் இயற்கையானது என்பதையும் மறுமலர்ச்சி இயக்கங்கள் எடுத்துக் காட்டும்.

## 2. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இந்து சமயக் கல்வி மறுமலர்ச்சி

செந்தமிழைப் பேணி வளர்த்து, சைவ நெறியினை நிலவச் செய்த ஆறுமுகநாவலர் (18.12.1822 – 19.11.1879), கல்விக்கு வரையறை கண்டு விசேடமாகத் தாய்மொழி' சமயப்பண்பு ஆகியவற்றில் உதித்து முழுமை பொருந்திய கல்விச் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று கொண்டவர்.

வித்தியா தானத்திற்குச் சமமாகியதொன்றுமில்லை; வித்தியா தானமே எல்லாத் தானங்களிலும் சிறந்தது என்பார் நாவலர்.

கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம், கல்வியென்பது அறமும் முத்தியுமாகும்.

எந்த நாட்டையும், எந்த ஊரையும், தன்னுடும், தன்னூரும் ஆக்குவது கல்வி.

மனிதன் கல்வியிலே பிறந்து, கல்வியில் வாழ்ந்து, கல்வியினை ஒரு வாழ்க்கைப் பழக்கமாகக் கொள்ளவேண்டும்.

கல்வி என்பது விளக்கேற்றல் என்று கொண்ட நாவலர், கல்வியாகிய விளக்கிலிருந்து பல கல்வி விளக்குகள் ஏற்றப்படல் வேண்டுமென்று கூறி, கல்விப் பொருளை நாம் பிறருக்குக் கொடுக்குந்தோறும், கல்வி பெருகிக்கொண்டே வரும் எனக்கொண்டார்.

கல்வி என்கின்ற அனுபவம், முதிர்ச்சியடைந்த ஆசிரியரின் உள்ளத்துக்கும் முதிர்ச்சியடைந்து கொண்டிருக்கும் மாணவருள்ளத்துக்குமிடையே அமைகின்ற தொடர்பாகும்.

இக்கல்வி, மக்கள் வாழ வழிவகுப்பது; அத்தோடு ஆன்மீக வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இணைந்த கருவியாக விளங்குவது.

வறிய மக்களுக்கு விமோசனம் அளிப்பது கல்வி என்று கூறும் நாவலர், வறுமையின்மையும், பிணியின்மையும் கல்விக்கு அடிகோலும் எனும் கருத்தினையும் முன்வைத்தார். நாவலர் நோக்கில், கல்வி என்பது சமய நெறிப்பட்ட கல்வியைக் குறிப்பிடுகின்றது. சமயதத்துவம், சமய அனுட்டானங்கள், சமய அபிமானம் முதலியவற்றை உணர்த்துவதே கல்வியின் நோக்கமாகும்.

ஆறுமுகநாவலர் வாழ்ந்த காலம் பலகோணங்களிலிருந்தும் இந்துசமய மரபும் கல்வியும், எழுச்சியும் இறங்கு தாழ்நிலையை நோக்கிக் கொண்டிருந்த காலம்.

பதினாறும் நூற்றாண்டிலிருந்து இந்நாட்டிற் பரவிய மேனாட்டார் ஆட்சியும், கிறிஸ்தவ சமயங்களின் ஆதிக்கமும், எதிர் மறைத் தன்மைகளும், இடையிட்ட ஒரு காலத்துக்கு

இந்து சமயத்தினையும், மரபினையும், அதனோடிணைந்த சைவக் கல்வியையும் எழுச்சி பெறுதவாறு ஆக்கிவிட்டன.

சமயத்துறையில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் விளைவாக, தமிழ்க்கல்வியும், இந்து நெறியும் வளர்ச்சி அடைவதற்கு முக்கிய தலங்கள் தோறும் பள்ளிக்கூடங்களை அமைத்தல் முக்கியம் என்பது நாவலர் தத்துவமாகும். கல்வி நிலையங்கள் மூலம் சமயம் மாற்றும் முயற்சியை எதிர்க்கவும் இந்துசமயச் சூழ்நிலையில் மாணவர்களுக்குக் கல்வி புகட்டவும், இந்து சமயக் கொள்கைகளை நிலைநாட்டவும் தமிழ், ஆங்கிலக் கல்வியை அளிக்கக்கூடிய கல்வி நிலையங்களை நிறுவவும் வேண்டுமென அறிஞர்கள் உந்தப்பட்டார்கள்.

இந்த நிலையில் இந்துசமயக் கல்வி இயக்கம் உருவாயிற்று. இவ்வியக்கம் அறிஞர்களின் செல்வாக்கை நிலையாகக் கொண்டு எழுந்தது ; இது சமய கலாசாரத் துறைகளிலே தனித்துவம் பேண எழுந்த இயக்கமாகும். இது சமயத்தையும், மொழியையும் கட்டிக் காத்து உயிரூட்டி வளர்ப்பதன் மூலம் அந்நியப் பண்பாட்டு ஆதிக்கத்தை எதிர்க்கும் விடுதலை உணர்வுகளையும் வலிமைப்படுத்தக்கூடியதாக இருந்தது.

1834ஆம் ஆண்டளவில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் 239 சைவப் பள்ளிக்கூடங்களிருந்தன. அவை காலப்போக்கிற் 'கிறிஸ்தவ கல்லூரிகளாக மாற்றம் பெற்றமையால், இந்துசமய மாணவர்களுக்கெனப் பள்ளிக்கூடங்கள் நிறுவவேண்டிய நியதி ஏற்பட்டது'

இதற்கு முன்னரே சைவசமயச் சூழலிற் கல்வி போதிக்கப்படவேண்டும் என்ற இயக்கம் 1806ஆம், 1811ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டாலும், இவ்வியக்கத்தின் வளர்ச்சி தடைப்பட்டது,

ஆங்கில அரசாங்கம் திட்டவட்டமான கல்விக்கொள்கை எதனையும் கொண்டிராததே இதன் முக்கிய காரணமாகும்.

எனினும். கிறிஸ்தவ சமயப் பிரசாரத்தைத் தடுக்கவும், சைவசமயப் பிரசாரம் செய்யவும் பள்ளிக்கூடம் ஒன்று 1842ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இப்பள்ளிக்கூடம் ஆகமங்களையும், சாத்திரங்களையும் கற்பிக்கும் பள்ளிக்கூடமாகவே எழுந்தது; ஆனல் இப்பாடத் தொகுதிகளைக் கற்பிக்க ஆசிரியர் பற்றாக்குறையினல், இது தமிழ்ப் பள்ளிக்கூடமாக உருவெடுத்தது.

இக்காலத்திலே தோன்றிய இந்துசமயக்கல்வி இயக்கம் ஆறுமுகநாவலரின் விடா முயற்சியினல், புதிய உணர்வினையும் வேகத்தையும் பெற்றது. 1848ஆம் ஆண்டில் நாவலர் தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலை முன்னோடியாக விளங்க நாவலரினதும், தனிப்பட்ட சமூக சமயவாதிகளினதும் ஊக்கத்தினல் இணுவில், கந்தர்மடம், கோப்பாய், புலோலி போன்ற இடங்களிலே தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் தோன்றின. கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கம் வழங்கிய நன்கொடையைப் போல் நாவலர் பாடசாலைகளுக்கும், உதவி வழங்கவேண்டுமென இந்துக்கள் அரசாங்கத்துக்கு விண்ணப்பித்தும் இவ்வேண்டுகோள்

ஏற்றுக்கொள்ளப்படவில்லை.[6] இதற்கு முக்கிய காரணம், அரசாங்கக் கல்விப்பகுதி கிறிஸ்தவ செல்வாக்குக்கு உட்பட்டு இருந்ததேயாகும்.

இதனுல் எழுந்த நல்ல விளைவு, இந்துக்கள் தமது தனித்துவத்தையும் தங்கள் பாரம்பரியத்தையும் விவாதங்கள் மூலம் அறிய முயன்றதேயாகும். 1870ஆம் ஆண்டில் நாவலர் பள்ளிக்கூடமும் உதவி நன்கொடைபெறும் நிலையைப் பெற்றது,

நாட்டில் நிதிப்பற்றுக்குறை ஏற்பட்ட காரணத்தைக் காட்டி, கிறிஸ்தவ பள்ளிக் கூடங்கள் பள்ளிக்கூடக் கட்டணங்களை உயர்த்தின. இதனுல் ஆங்கிலக் கல்வி பெறும் பேற்றினைப் பெற்ற இந்துசமய மாணவர்கள் அவதியுற்றனர். இதனுல் இந்துக்கள் சமயச் சார்பற்ற பள்ளிக்கூடங்களை அரசாங்கம் நிறுவ வேண்டுமெனக் கோரினர்.

இந்துக்கள் இக்காலத்தில் விடுத்த வேண்டுகோள், இந்நாட்டுக் கல்வி வரலாற்றில் 1943ஆம் ஆண்டிலும், 1960ஆம் ஆண்டிலும் வரவேற்க வேண்டிய தாக்கங்களை உண்டு பண்ணியது எனக்கொள்வது பொருத்தமாகும்.

அரசாங்கம் சமயச் சார்பற்ற பள்ளிக்கூடங்களை ஆரம்பித்தல் வேண்டுமென்று விடுத்த வேண்டுகோள், கிறிஸ்தவ சங்கங்களால் எதிர்க்கப்பட்டது.[7]

அரசாங்கத்தின் கவனமில்லாத்தன்மும், கிறிஸ்தவர்களின் எதிர்ப்பும் இந்துப் பள்ளிக் கூடங்கள் அமைப்பதற்கு எதிரிடையாயிருந்தன. அரசாங்கத்தின் எல்லைச் சட்டமும் இச்செயலை ஊக்குவித்தது;

எனினும் நாவலர், இந்து மாணவர் நன்மை கருதி 1872ஆம் ஆண்டில் சைவ ஆங்கில வித்தியாசாலையை நிறுவினர்.[8] இது கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களுக்கு அறைகூவலாக விருந்தாலும், இப்பள்ளிக்கூடத்துக்கு அரசாங்க அங்கீகாரம் கிடையாத காரணத்திலுைம் பணவசதி இல்லாத காரணத்திலுைம் இதனை மூடவேண்டிய நிலை உண்டாயிற்று.

இக்காலப்பகுதியில் உருவாகிய இவ்வியக்கம் பழைமை விரும்பும் ‘உயர்ந்தோர்’ எனக் கருதப்பட்டவர்களால் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கம் தாபன அடிப்படையிலும் நிறுவப்படவில்லை.

கிறிஸ்தவ பள்ளிக்கூடங்கள் சமூகத்தில் ‘தாழ்ந்தவர்கள்’ என்று கருதப்பட்ட மாண வர்களுக்குச் சில உதவிகளும், சலுகைகளும் அளித்தன. இந்துசமய மறுமலர்ச்சியினர் இதுபோன்ற சமூக நோக்கங்களைக் கடைப்பிடித்தமைக்குச் சான்றுகளில்லை,

இக்காலத்தில், பாரத நாட்டுக்கும், விசேடமாகத் தென்னகத்துக்கும் ஈழத்துக்கும் சமய–தமிழ் வளர்ச்சி, கலாசாரப் பரிவர்த்தனம், அறிஞர்குழாம் தொடர்பு ஆகியன ஏற் பட்டது குறிப்பிடத்தக்கது.

நாவலர் மறைவைத் தொடர்ந்து, இவ்வியக்கம் தளர்ச்சி அடைந்தது என்பது உண்மை; ஆனுல், வெகுவிரைவிற் புத்துயிர் பெற்று, முந்தியகாலப்பகுதியிலும் பார்க்க வேகமாகச் செயற்பட ஆரம்பித்தது.

1880 ஆம் ஆண்டு தொடக்கம் பத்தொன்பதாம் நூற்ருண்டு முடியும் வரையுள்ள காலப்பகுதியில், தங்கள் சமய வளர்ச்சிக்கான திட்டங்களை இந்துக்கள் செம்மையோடு திட்டமிட்டனர்.

இதே காலப்பகுதியில், பௌத்த மக்கள் மத்தியில் அமெரிக்கரான கேணல் டேவிட் ஒல்கொட், என்பவருடைய உழைப்பாலும், உற்சாகத்தாலும் பௌத்த பிரம்ம ஞானசபை என்ற சபை நிறுவப்பட்டது. இவர்கள் பௌத்த சமயத்தை வளர்க்கும்பொருட்டும், பள்ளிக் கூடங்களை அமைக்கும் பொருட்டும் இத்தாபனத்தை நிறுவினர்கள். இச்சபை பௌத்த மக்களிடையே ஏற்பட்டிருந்த விழிப்புணர்ச்சியை மேலும் வளரச் செய்தது.

1880ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இச்சபை 1890ஆம் ஆண்டளவில் நாற்பது பௌத்த பள்ளிக்கூடங்களை நிறுவியது.

1904 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி ஆனந்தாக் கல்லூரியில் சேர். பொன்னம்பலம் இராமநாதனவர்கள் பரிசளிப்பு விழா உரை நிகழ்த்தினர்கள்.

அங்கு, அவர் சிங்கள நண்பர்களுக்கு, அவர்களது தாய்மொழியான சிங்கள மொழியின் மகத்துவத்தையிட்டு எடுத்துக் கூறினர். ஒரு இன மக்கள், தங்கள் மொழியிற் பேசுவதன் மூலமும் எழுதுவதன் மூலமுமே உயர் அறிவினை வளர்க்க முடியும்; அம்மக்களின் தேசிய மரபுகளைப் பாதுகாக்க முடியும்; இது மறுமலர்ச்சிக்கும் முக்கியமானதாகும் எனும் கருத்தினை அவர்கள் முன்வைத்தார். பௌத்த சமயமும், சிங்கள, மொழியும் இணைந்து கல்வி மறுமலர்ச்சியை உருவாக்கவேணடு மெனவும் கேட்டுக் கொண்டார்.

ஒல்கொட். அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பௌத்தக் கல்வியியக்கம் ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

பௌத்த பிரம்மஞான சபை அமைக்கப்பட்ட பொழுது, சேர். இராமநாதன் உதவிப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது,

பௌத்த மக்களிடையே சமய, கல்வி மறுமலர்ச்சியை உருவாக்கிய பிரம்மஞான சபையாருக்கும், இராமநாதன் அவர்களுக்குமிடையே இருந்த தொடர்பு இந்து - பௌத்த வளர்ச்சிக்கு ஒருமித்து உழைக்கும் நிலையினை ஏற்படுத்தியது.

சேர். பொன். இராமநாதனும், கேணல் ஒல்கொட்டும் சேர்ந்து நிறுவ இருந்த இக்கல்லூரி போதிய ஆதரவின்மையால், கைகூடாது போயிற்று.

இந்து பௌத்தக் கல்லூரியொன்று அமைப்பதன் மூலம் இரு இன மக்களும் முன்னேர்கள் அளித்த பாரம்பரியப் பண்பாட்டுச் செல்வங்களை இணைக்க முடியுமென்று கொண்டவர் இராமநாதன். இந்து - தமிழ் மக்களையும் பௌத்த - சிங்கள மக்களையும் ஒன்றிணைப்பதற்கு இது சிறந்த வழி எனக்கொண்டார் ஒல்கொட்.

சைவ பரிபாலன சபை

பிரம்மஞானசபை போன்ற அமைப்பு தமக்கும் அவசியமென்பதை இந்துக்கள் உணர்ந்தனர். ஏற்கனவே சைவ சமயத்தைப் பேணிக்காப்பதில் நிறுவன வடிவமைப் பொன்றின் தேவை ஆறுமுகநாவலரால் உணரப்பட்டிருந்தது. இந்து மக்களால், 1888ஆம் ஆண்டில், சைவ பரிபாலன சபை தாபிக்கப்பட்டது.

இது ஈழத்து இந்துசமய வரலாற்றில், ஒரு திருப்பமாக அமைந்தது.

வைதிக சமய உண்மைகளையும், கோட்பாடுகளையும் நாடெங்கும் சென்று எடுத்துக் கூறக்கூடிய திறமையான குழுவொன்றினை அமைத்தல்; சைவ சமூகத்தினது அரசியல் சமூக, சமய நோக்கங்களை வெளிப்படுத்தக்கூடிய பத்திரிகைகள், இலக்கியம், விஞ்ஞானம், தார்மீகம், சமயம் ஆகிய துறைகள் சம்பந்தப்பட்ட நூலகம் ஒன்று நிறுவுதல் ; உயர்தர உலகியற் கல்வியினையும், சமயக் கல்வியினையும் போதிக்கக்கூடிய ஆங்கிலப் பள்ளிக்கூடம் நிறுவுதல், பத்திரிகை வெளியிடல், பெண்களைப் படிப்பித்தல் ஆகியனவே இச்சபையின் நோக்கங்கள் என வரையறுக்கப்பட்டன.

இக்குறிக்கோள்களை நிறைவேற்றும்பொருட்டு, தமிழ் அறிஞர்களும். சமயவாதிகளும், ஆங்கில அறிஞர்களும் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில், மக்களுக்கு எடுத்துரைத்தனர்.

1890ஆம் ஆண்டு 'இந்து உயர்தரப் பாடசாலை', என்று நியாயவாதி நாகலிங்கம் அவர்கள் நிறுவிய பள்ளிக்கூடத்தினை இச்சபை பொறுப்பேற்றது. இது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி எனும் பெயரைப் பெற்றது.

1899ஆம் ஆண்டில் யூலை மாதத்தில், 'இந்துசாதனத்தின்' ஆங்கில ஏடு இக்கல்லூரியையிட்டுக் குறிப்பிடும் பொழுது, "ஆறுமுகநாவலர் அவர்கள் இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் இந்து சமய மக்களால், இந்துக்களுக்கென ஒரு கல்லூரி நிறுவப்பட வேண்டுமென விரும்பினார்கள். சைவ சமயத்துக்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அவராற்றிய தொண்டு யாழ்ப்பாண வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.

அவரது இவ்வெண்ணம் நிறைவேறுவதற்கு ஒத்துழைப்புக் கிடையாமை நமது தேசிய மரபின் ஒரு குறைபாடாகும்.

நாவலரது இவ்வெண்ணம் கைகூடாது விட்டாலும், அவர் வண்ணார்பண்ணையில் உயர்கல்லூரி ஒன்றினை நிறுவினார்கள். இக்கல்லூரியும் வெஸ்லியன் சங்கத்தின் எதிர்ப்பினால் உதவி நன்கொடை பெறவில்லை.

எனினும் நாவலர் உள்ளத்தில் எழுந்த கரு 1890ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியாக உருவெடுத்துள்ளது", எனக் கூறியுள்ளது.

இக் கல்லூரியின் வளர்ச்சி இந்துசமயக் கல்லூரியின் வளர்ச்சியாகுமெனக் கருதிய சைவர்கள், இதனது வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் உழைத்தனர்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்களுள் ஒருவர் சி.த.மு.பசுபதிச் செட்டியார் ஆவர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் தோற்றம், அந்நியரது கலாசார ஆதிபத்தியத் திற்கு எதிராக ஏற்பட்ட அறிஞர்களின் எதிர்ப்பின் தோற்றத்தை எடுத்துக் காட்டுகின்றது.

நாம் கண்ட இக்கல்வி இயக்கத்தின் பயனுகக் கொக்குவில், உரும்பிராய், காரைநகர், சாவகச்சேரி, வட்டுக்கோட்டை போன்ற இடங்களிற் கிளைக்கல்லூரிகள் ஆரம்பிக்கப் பட்டன.

இந்து உயர்தரப் பள்ளிக்கூடங்களை விட, பத்தொன்பதாம் நூற்றுண்டின் முடிவிலும், இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலும், நடுப்பகுதியிலும் சுழிபுரம், மீசாலை, கந்தரோடை, தெல்லிப்பழை, மானிப்பாய் ஆகிய இடங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1943ஆம் ஆண்டில் நிறுவப்பெற்ற யாழ். இந்து மகளிர் கல்லூரி, இந்து சமயக் கல்வி மறுமலர்ச்சிக்கு மேலும் வலுவளித்தது. திருமதி கிளேரு மத்வாணியின் அதிபர் சேவை விதந்து பாராட்டப்படத்தக்கது.

இலங்கையில், பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சி எதிர்பார்த்த அளவிற்கு வளராத காரணத்தினுல், இங்கு தலை சிறந்து விளங்கிய பல கிறிஸ்தவக் கல்லூரிகளும், பௌத்தக் கல்லூரிகளும், இந்துக்கல்லூரிகளும் கல்கத்தாப் பல்கலைக்கழகத்தோடும் சென்னைப் பல்கலைக் கழகத்தோடும் இணைப்புக் கல்லூரிகளாக இணைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, 1893ஆம் ஆண்டில், கல்கத்தாப் பல்கலைக்கழகத்தினுல் அங்கீகரிக்கப்பட்டு, 1895ஆம் ஆண்டில் அதன் இணைப்புக் கல்லூரிகளில் ஒன்ருக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்து சமயக் கல்வி இயக்கம், கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களின் வளர்ச்சியைக் கட்டுப் படுத்தியதோடமையாது, இந்துசமயச்சூழலில் மாணவர்கள் கல்வி பயிலும் வாய்ப்பினையும் அளித்தது ; தேசிய உணர்ச்சியினைச் சமய, கலாசாரத்துறைகள் மூலம் உருவாக்கி, நமது பண்பாட்டுப் பாரம்பரியத்தை உணரப்பண்ணியது.

இவை பிற்காலத் தேசிய இயக்கங்களுக்கு உறுதுணையாக விளங்கின.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிற் சமய மறுமலர்ச்சிக்கு உறுதுணையாய் விளங்கியது சுவாமி விவேகானந்தரின் ஈழத்து வருகையுமாகும்.

பாரத நாட்டில் 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் எழுந்த மறுமலர்ச்சி நெறியில் முக்கியமான பங்கெடுத்துக் கொண்ட இயக்கங்களுள் ஒன்று பிரம்ம சமாஜம் : மற்ற இயக்கம் ஆரிய சமாஜம். இராமகிருஷ்ண சங்கமும் ஆத்மீக, கல்வி இயக்கமாக நிலை பெற்றது.

இந்திய தேசிய காங்கிரசும் (1885), சுதேசிய இயக்கமும் (1906—1915), பிரதேச இயக்கங்களாக அரும்பித் திராவிடத் தேசிய இயக்கமாக உருவெடுத்த இயக்கங்களும் 'மறுமலர்ச்சி', இயக்கங்களாக எழுந்தன.

இவை அனைத்தும் நமது நாட்டின் சமய, பண்பாட்டுக் கலாசார மறுமலர்ச்சியிலும் விடுதலை உணர்விலும் ஆழ்ந்த தாக்கங்களை எற்படுத்தின.

கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் 19ஆம், 20ஆம், நூற்றுண்டுக் கல்வி வளர்ச்சியை எடுத்துப் பார்க்கும்போது கிறிஸ்தவ சங்கங்கள், சிறிய, பெரிய பள்ளிக்கூடங்களை அமைத்தாலும் அவை மறுமலர்ச்சி நிலையங்களாக விளங்கவில்லை.

இராமகிருஷ்ண சங்கம் அங்கு செயற்படத் தொடங்கிய பின்னரே இந்துசமயக் கல்வி மறுமலர்ச்சி ஆரம்பமாயிற்று. சாதி, சமய, இன, மொழி வேறுபாடுகளுக்கப்பால், இக்கல்லூரிகள் ஒங்கி நின்றன.

ஆனல் ஏறத்தாழ 1910ஆம் ஆண்டு தொடக்கம், இப்பிரதேசத்தின் தனவந்தர்கள் சிலர் இந்துப் பள்ளிக்கூடங்களைத் தொடக்கினுர்கள். ஆனல் ஒழுங்கு படுத்தப்பட்ட நிறுவன அடிப்படையில் சித்தங்கேணியைச் சேர்ந்த மட்டக்களப்பு வைத்திலிங்கம், மார்க் கண்டன் போன்ருேர் ஏறக்குறைய 15 பள்ளிக்கூடங்களை நிறுவினுர்கள். இவை பின்னர் இராமகிருஷ்ண சங்கப் பள்ளிக்கூடங்களாயின.

இங்கு எழுந்த இந்துசமய இயக்கத்தோடு பல அரசாங்க உத்தியோகத்தர்கள் இணைந்து செயற்பட்டார்கள். இயக்கம் மேலோங்கிவளரத் தொடங்கியது. வெஸ்லியன் சங்கத்தினரின் வேண்டுகோளுக்கிணங்கி, அரசாங்கம் இதனைத் தடை செய்தது.

வெஸ்லியன் சங்கத்தினரும், தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் அமைப்பதில் ஆர்வம் காட்டிய காலமிது. அவர்கள் இந்துசமயக்கல்வி இயக்கத்தினை வளரவிடாது எடுத்த முயற்சிகளுக்கு எதிராகச் சேர். பொன்னம்பலம் இராமநாதன் 1913ஆம் ஆண்டுக்கும், 1916ஆம் ஆண்டுக்குமிடையில் சட்டநிருபண சபையிற் குரல் எழுப்பினுர்.

## 3 இந்து சமயக் கல்விச் சிந்தனையாளர்களும் அவர்தம் பணிகளும் :

சிந்தனையாளர் வரிசையிற் சிறப்பிடம் பெறுபவர்களுள் ஒருவராக, சேர். பொன். இராமநாதன் (1851-1930) விளங்குகின்றுர். இராமநாதன் அவர்கள் அரசியல், சமுதாயச் சீரமைப்பு, நாட்டின் விடுதலை, ஒற்றுமை, நாட்டின் தனிப்பெருமை, கல்வி, கலை வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி, சமயநெறிஆகிய பல துறைகளுக்கும் தத்துவம் அளித்த கர்ம யோகியாக விளங்கியவர். இலங்கைக்கென ஒரு கல்வித் தத்துவத்தை உருவாக்கியவர்களுள் அவருமொருவர். கல்வி நெறி வகுத்த இராமநாதன் தேசிய ஒற்றுமைக்கும் நெறி வகுத்தார்.

இக்காலத்திற் பல கல்விக் கூடங்கள் மறுமலர்ச்சி நிலையங்களாக எழுந்தன. ஆனந்தாக் கல்லூரியும், சாகிராக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் முறையே

பௌத்த, இஸ்லாமிய, இந்து மறுமலர்ச்சிக் கல்லூரிகளாக எழுந்தன. தமிழ் நெறியும் சைவநெறியும் தழைத்தோங்க வேண்டுமெனும் அவரது இலட்சியத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியோடு பல இந்துக் கல்லூரிகள் இவரது அனுசரணை பெற்று உதித்தன.

ஆடவர்களுக்கு நிறுவப்பட்ட கல்விக்கூடங்களோடு இந்து மகளிர்க்கு உயர்நிலைக் கல்வி அளிக்கக் கல்வி நிலையம் ஒன்று வேண்டும் என்பதையும் இராமநாதன் உணர்ந்தார். அறிவுத் திறனும், அறநெறியும் சமயப்பண்பும் ஒன்றிணைந்த மகளிர் மூலமும் தமிழ் நெறிமரபும், சைவநெறி மரபும் இணைவதன் மூலமும் நாட்டின் மறுமலர்ச்சி புதுமெருகு பெறும்; நாடு வளர்வுறும் என்னும் சிந்தனையில் எழுந்தது இராமநாதன் கல்லூரி.

இக்கல்லூரி இராமநாதனின் சிந்தனையில் நீண்டகாலமாக இடம் பெற்றுவந்த தேசிய ஆத்மீக இலக்குள்ள கல்விக்கருவாக வளர்ந்தது. 20.01.1913இற் செயற்பட ஆரம்பித்தது. 1879ஆம் ஆண்டில் சட்ட நிரூபண சபையில், தமிழர் பிரதிநிதியாக இடம் பெற்ற காலந்தொட்டு அவர் வெளியிட்ட தேசிய மறுமலர்ச்சி, வேண்டிய கல்விச் சிந்தனை வடிவமாக இக்கல்லூரி உருவாக்கப்பட்டது.

21.06.1905இல் வெளியான 'இந்து ஓகன்' பத்திரிகை இவரது கல்விப்பணி பற்றி மதிப்பிடும் போது,

> "எல்லாத் தேசிய இனத்தவரும் ஒன்றுகக் கற்கக்கூடிய பெரிய கல்லூரியினை அமைத்துக் கீழை நாட்டினதும், மேலை நாட்டினதும் சீரிய சிந்தனைச் செல்வங்களைச் சீரியமுறையிற் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ளார்"[10] என்று குறிப்பிடுகின்றது. மேலும் இக்கல்லூரிபற்றி அவர் குறிப்பிடும் பொழுது,

> "நவீன நிலைமைக்கு ஏற்ற கல்வியினையும் எமது பண்டைய நூல்களிற் பொதிந்து கிடக்கும் இலக்கிய தத்துவ அறிவையும் இணைத்துத் தகுந்த கல்லூரி அமைப்பதே எமது முழு முயற்சியாகும்'' என்கின்றார்.

சைவப் பெண்பிள்ளைகள் உயர்கல்வி பெறாத நிலையும் அதற்கான பள்ளிக் கூடங்கள் இல்லாத குறையை நிவர்த்தி செய்யவுமே இக்கல்லூரியை அமைக்க முன் வந்தார் எனலாம். தேசிய மறுமலர்ச்சியினை ஏற்படுத்த வேண்டும் எனக் கருதிய இராமநாதன் யாழ்ப்பாணத்தில் முதற்கண் சைவப் பெண்பிள்ளைகள் சைவச் சூழலில் உயர்கல்வி பெறக் கல்லூரி ஒன்றினை அமைக்க முன்வந்தார். இக்கல்லூரியிற் கல்வி பயிலும் பெண்கள் ஆங்கில நாட்டினதும், சொந்தப் பண்பாட்டினதும் சிறந்த விழுமியங்களைப் பெற்று நல்மனைவியராக வேண்டிய கல்வியைப் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்படும் என்றும் அவர் விளக்குகின்றார். சைவப் பெண்பிள்ளைகள் தடையின்றிப் பயன்படுத்தப்பட வேண்டும் எனக் கருதி அதற்கு ஏற்ற சூழ்நிலையை முன்கூட்டியே திட்டமிட்டு உருவாக்கியமையைத் தெளிவாக அறிய முடிகின்றது.

இக்கல்லூரி, கிறிஸ்தவப் பெண்கள் உயர்கல்விப் பள்ளிக்கூடங்களிற் கல்வி கற்று வந்த சைவப் பெண்களைக் கவரும் நோக்கம் அற்றது என்பதனையும் தெளிவு படுத்தினார் இராமநாதன் கல்லூரி பற்றி 7.2.1911இல் வெளியான "இந்து ஓகன்'' பத்திரிகை

"திரு.இராமநாதன் பெண்கள் கல்லூரி யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது. அது இலங்கைத் தேசியத்தின் வரலாற்றிற் புதிய சகாப்தத்தை உருவாக்குவதாயிருக்கும்[12] எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் பணியிலேயே பள்ளிக் கூடங்கள் சிறந்த கல்விச் சூழலை வழங்க முடியும் என்பதனை உணர்ந்த இராமநாதன் நல்லாசிரியப் பண்புகள் யாவும் ஒன்றித்த ஆளுமை உடையோரையே தமது கல்லூரியின் ஆசிரியராகத் தெரிவு செய்தார். இங்கிலாந்தின் கல்வி வட்டத்திற் பெரும் மதிப்புப் பெற்றிருந்த கல்வியாளராகவும், ஆன்மீக விருத்தி ஈடுபாடு கொண்டவருமாயிருந்த திருமதி புளோறன்ஸ் எமேறியே இராமநாதனின் சைவப் பெண்கள் கல்லூரியில் முதல் அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார். இவ் வதிபர் இங்கு தமிழரின் பண்பாட்டு மறுமலர்ச்சிக் கல்விப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். 20.01.1913 திங்கள் காலை 10மணிக்குக் கல்லூரி சம்பிரதாயச் சடங்குகளுடன் திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவினையிட்டு எடுத்துக் கூறிய "இந்து ஒகன்"

"கல்லூரியின் ஆரம்பம் தமிழர் வரலாற்றிற் புதிய சகாப்தத்தை உருவாக்கும். இலங்கை இந்துக்கள் தம்வாழ்வில் என்றும் நினைவிலிருத்தும் தினம்"[13] எனக் குறிப்பிட்டது. இராமநாதன் கல்லூரி அமைப்புப்பணி ஒரு தேசிய மறுமலர்ச்சிப் பணி என்றே கருதப் பட்டது.

"இலங்கையில் 12.10.1913இல் தற்காலிக ஆள்பதியாகவிருந்த ஆர் ஈஸ்ரப், கல்லூரிக்கு வருகைதந்து வழங்கிய பாராட்டும் 24.03.1915இல் ஆள்பதி ரூபட் சாமஸ் கல்லூரிக்கு வருகை தந்து வழங்கிய பாராட்டும் அறிவுரையும், நாட்டின் தேசிய மறுமலர்ச்சிக்கு இராமநாதன் கல்லூரி பணியாற்றும் என்னும் எதிர்பார்ப்பினை விளக்குவதாகும்.[14]

27.11.1927இல் இக்கல்லூரிக்கு வருகை தந்த காந்தி அடிகள் இக்கல்லூரி பற்றிய மதிப்பீட்டைப் பின்வருமாறு கூறுகின்றார். "சேர்.இராமநாதன் பரோபகாரத்துக்கும் சிந்தனைச் சிறப்புக்கும் நினைவாலயமாக நிலைத்து நிற்கும் இந்நிறுவனத்துக்கு நான் வராதிருந் திருப்பேனாயின் என் வாழ்வெல்லாம் கவலைப்பட்டிருப்பேன்"[15]

இராமநாதன் தமது கல்விக் கோட்பாட்டின் அடிப்படையில் இராமநாதன் கல்லூரியை இயக்கத் தேசிய பண்பாட்டு மறுமலர்ச்சியினை ஏற்படுத்த முயற்சித்தார். சைவ ஆண்பிள்ளைகளுக்காக பரமேஸ்வரக் கல்லூரி நிறுவவும், சைவ வித்திய விருத்திச் சங்கம் உருவாக்கவும் சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலை நிறுவவும் இக்கல்லூரியின் களமே பயன்பட்டது.

கல்லூரியின் கல்விப்பணியினைப் பரவலாக்க இராமநாதன் பல நடவடிக்கைகளை மேற் கொண்டார். திக்கற்ற சைவச் சிறுமிகள் கல்வி பெற அவர் அமைத்த குருகுலம் எனப் படும் விடுதி சைவப் பிள்ளைகளின் முதல் விடுதியாகும். 26.11.1930இல் நிறுவுநரின் மறைவின் பின்னும் கல்லூரி அவரது துணைவியாரின் பணியில் முன்னேறியது. தமதுதுணைவரின் கல்விச் சிந்தனையையும், கல்விப் பணியையும் கருத்தாகக் கொண்டு லீலாவதி இராமநாதன் அம்மையார் அயராது உழைத்தார்.

இராமநாதன் கல்லூரியின் நிறுவுநர் குடும்பத்தாரின் வதிவிடமாயிருந்த பகுதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவாயுள்ளது.

பெண்களுக்கு வழங்கப்பட்ட கல்வி பயனுள்ளதாகக் கண்ட மக்கள் ஆண்களுக்கும் அத்தகைய கல்வி வாய்ப்பினை ஏற்படுத்துவது அவசியம் எனக்கருதி அப்பணியை இராமநாதன் அவர்களே செய்யும் அறிவும் திறமையும் மனப்பாங்கும் உடையவர் எனக் கொண்டு,

''1920ஆம் ஆண்டில் கீரிமலையில் கூடிய இந்து இளைஞர் மகாநாட்டில்[16] வேண்டுகோள் விடுத்தனர்''. சைவப் பெற்றோர் சார்பாக விடப்பட்ட வேண்டு கோளை ஏற்றுக் கொண்ட இராமநாதன் முழு ஆர்வத்தோடு செயற்பட்டார். இதே போன்று வெளிநாட்டில் உள்ளோரும் வேண்டுகோள் விடுத்தனர். சமய அறிவு, சமய ஒழுக்கம், சமய வாழ்வு என்பன ஆத்மீக வாழ்வுக்கு வழி செய்யும் என்ற விழுமியத்தைக் கவனத்திற் கொண்டு இவர் இக்கல்லூரியை அமைத்தார்.

''பரமேஸ்வரக் கல்லூரி என்பது அதி உன்னதமானவரின் கல்லூரி''[17] என்பதே இராமநாதன் தந்த விளக்கம்.

பரமேஸ்வரனை முழுமுதற் கடவுளின் பெயர் கொண்ட கல்லூரியின் கோட்பாடும் செயற்பாடும் மேன்மையான வாழ்வுக்கு வழி வகுப்பனவாய் அமைதல் வேண்டும் என்னும் சிந்தனை செயற்படலாயிற்று. தேசிய சமய பண்பாட்டுக் கல்வி விழுமியங்களை மாணவருக்கு வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டது. இராமநாதனின் கல்விச் சிந்தனைக்கும் கல்விப்பணிக்கும் எடுத்துக்காட்டாக அமைந்தது இக்கல்லூரி. இக்கல்லூரி அமைப்பதற்குப் பெருந்தொகையான பணம் செலவிடப்பட்டதனையும், ஆலயம், நூல்நிலையம் என்பன சிறப்பாக உருவாக்கப்பட்டதனையும் கருத்திற் கொண்டு நோக்கும் பொழுது சைவப் பண்பாட்டுப் பின்னணியிற் பல்கலைக்கழகத்தோடு இணைந்த கல்லூரியாகச் செயற்படத் தக்க வசதிகளோடு அமைக்கப்பட்டதெனக் கருத இடமுண்டு.

கல்லூரியின் ஆரம்ப ஆண்டிலேயே இலண்டன் பல்கலைக்கழக இடைநிலைக் கலை, விஞ்ஞான பட்டப் பரீட்சைகளுக்கு மாணவரை ஆயத்தம் செய்தமை அவதானிக்கக் கூடியது. இலங்கைப் பல்கலைக்கழக அமைப்புப் பற்றி ஆலோசிக்கப் பட்ட சட்ட நிரூபண சபை விவாதங்களில் உத்தேச இலங்கைப் பல்கலைக்கழகம் இணைந்த கல்லூரிகளைக் கொண்ட அமைப்பாயிருத்தல் வேண்டும் என இராமநாதன் மிக அழுத்தமாகக் கூறி வந்தமை மனங் கொள்ளத்தக்கது.

''கல்வியில் இரண்டாவது பிரதேசமாக விளங்கும் வடமாகாணத்தில், பல கல்லூரிகள் தகுதியான தேசாபிமானிகளால் நடத்தப்படுகின்றன''[18] எனக் குறிப்பிட்ட இராமநாதன், பல்கலைக்கழகக் கல்வி வழங்கும் தகுதியுள்ள நாட்டிலுள்ள கல்லூரிகளை, இணைந்த கல்லூரிகளாகக் கொண்டு புதிய பல்கலைக்கழகம் இயங்க வேண்டும் என எண்ணினர். இவற்றிலிருந்து பரமேஸ்வரக் கல்லூரியும், இலங்கையில் அமைக்கப்பட

விருந்த பல்கலைக்கழகத்தின் இணைந்த கல்லூரியாக அமையுமாறு உயர்தரமானதாக்கத் திட்டமிடப்பட்டது எனத் துணியலாம்.

சிறந்த தமிழ், ஆங்கிலப் பண்பாட்டு விழுமியங்களைப் பரமேஸ்வரக் கல்லூரி மாண வருக்குக் கிடைக்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது. ஆத்மீக விருத்தியினைக் குறிக்கோளாகக் கொண்டு சகிப்புத் தன்மை அங்கு நிலவியதோடு ஏனைய சமய மாணவரின் ஆத்மீக விருத்திக்கும் ஆவன செய்யும் சூழல் இருந்தமை நிறுவுநரின் கல்விச் சிந்தனைக்கும் கல்விப்பணிக்கும் எடுத்துக் காட்டாகும். 1925ஆம் ஆண்டில் இக்கல்லூரியிற் கிறிஸ்தவ பௌத்த மாணவரும் பௌத்த குருமாரும் கூடக் கல்வி கற்றனர்.

நிவுறுநரின் மறைவின் பின் அவரது துணைவியாரும், மகளின் கணவரான சு. நடேச பிள்ளையும் தொடர்ந்து அக்கறை செலுத்திக் கல்லூரியின் பரந்த செயற்பாட்டிற்கு உதவி, நிறுவுநரின் கல்விச்சிந்தனையைச் செயற்படுத்தினர். இக்கல்லூரி தமிழர் பண்பாட்டு நிலையமாகத் தொடர்ந்து செயற்பட்டது. நவநீதகிருஷ்ண பாரதியாரின் ஆசிரியப் பணி கல்லூரியில் பண்டித ஆசிரியப் பயிற்சி இடம் பெறப் பெரிதும் உதவியது. பரமேஸ்வரக்கல்லூரியில் இருந்த ஆசிரிய பயிற்சித்துறை 1947ஆம் ஆண்டுவரை இயங்கியது.

இராமநாதனின் கல்விச் சிந்தனைகளுக்கும் கல்விப்பணிகளுக்கும் எடுத்துக் காட்டாக விளங்கியது அவர் நிறுவிய சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலையும், அதன் உறுப்பாகிய பயிற்சிப் பாடசாலையுமாகும். இலங்கையில் முதல்முதல் நிறுவப்பட்ட சைவப்பெண்களுக்கான ஆசிரிய கலாசாலை இதுவாகும். சைவப் பெண்கள் சைவச்சூழலில் ஆசிரியராக உருவாக்கப்பட்டு, தேசிய பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் சமுதாயப் பங்களிப்பை ஆற்ற வேண்டும் என்பது அவரது முடிவாகும். மேலும் தகுதியான ஆசிரியைகளை வடமாகாணத்தில் உருவாக்கும் ஆசிரிய கலாசாலையை உருவாக்க வேண்டும் என்னும் கருத்தும் அவரிடத்தில் இருந்தது,

1914ஆம் ஆண்டு இராமநாதன் கல்லூரி ஆண்டறிக்கையில் யாழ்ப்பாணத்தில் ஓர் ஆசிரிய கலாசாலையின் அவசியத்தை அதிபர் சுட்டிக் காட்டி உள்ளார்.

''யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழ் ஆசிரியருக்கு ஒரு பயிற்சிக் கல்லூரி சிங்கள வருக்கு இருப்பது போல் அடுத்த ஆண்டில் ஏற்படுத்துதல் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்'' [19]

மேலும் 20.09.1926இல் வெளியான 'இந்து ஒகன்' இல் வெளியான ஆசிரியர் கருத்தில், ''பெருந்தொகைப் பெண்கள் ஆசிரியத் தொழிலை மேற்கொள்ள ஊக்கப்படுத் தப்பட வேண்டுமானல் இராமநாதன் கல்லூரி முகாமையின் கீழ் அல்லது சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தால் சைவப் பயிற்சிக்கல்லூரி நிறுவப்பட வேண்டும்''[20] என்று அபிப்பிராயந் தெரிவிக்கப்பட்டிருந்தது.

1626ஆம் ஆண்டின் இறுதியில் இராமநாதன் சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலை நிறுவப்பட்டு நீண்ட நாட் கல்வித்தேவை பூர்த்தியாக்கப்பட்டது. சைவப் பெண்கள்.

ஆசிரிய கலாசாலைக்குப் பயிற்சிப் பள்ளிக்கூடமும் இராமநாதன் கல்லூரியின் ஒரு பிரிவாக அவ்வாண்டிலேயே நிறுவப்பட்டது. இவ்வாசிரிய கலாசாலையிற் பயிற்சி பெற்ற சைவப் பெண்கள் தேசிய சைவசமயப் பண்பாட்டுப் பாரம்பரியத்தினைச் சைவமக்கள் மத்தியில் மறுமலர்ச்சியுறச் செய்வதிற் பெரும் பங்கு கொண்டனர். இராமநாதன் அமைத்த சைவப் பெண்கள் ஆசிரிய கலாசாலை இந்நாட்டின் சைவக்கல்வி வரலாற்றிற் சிறப்பிடம் பெறுகின்றது.

இராமநாதனின் கல்விச் சிந்தனைகளினால் உருவாகிய கல்விப்பணி இந்நாட்டின் வரலாற்றில், தேசிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தித் தந்த தேசியக் கல்வித்திட்டமாகச் செயற்பட்டது. சேர்.முத்துக்குமாரசாமி, பொன்னம்பலம் சகோதரர்கள், கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி, சு.நடேசன் ஆகியோர் இந்நாட்டில் ஒரு நூற்றாண்டுக் கல்வி மரபோடு பின்னிப் பிணைந்திருந்தனர். ஒரு யுகத்தைக் கல்வி உயர்வும், சமூக உணர்வும் சமய உணர்வும் கொண்டதாக அமைக்க வேண்டும் என்ற அவர்களின் விருப்பு இந்நாட்டின் வரலாற்றில் அவர்களுக்கான தனி இடத்தைத் தந்துள்ளது.

இராமநாதனைத் தமது ஆத்மீகக் குருவாகக் கொண்டு 1906ஆம் ஆண்டில் இராமநாதனின் இரண்டாவது வாழ்க்கைத் துணைவியாகியவர் அவுஸ்திரேலிய நாட்டு மங்கை செல்வி. ஆர்.எல். ஹரிசன் ஆவர். ''கீழ்நாட்டு மாணவர்களுக்கு மேல்நாட்டுக் காட்சிகள்'', என்ற அவரின் நூல் இராமநாதனின் அமெரிக்கச் சுற்றுப்பயணத்தின் போது ஆற்றிய சொற்பொழிவுகளைத் தொகுத்து கீழைநாட்டு மாணவர்களுக்கு அவற்றை அரிய தகவல்களாகத் தருகின்றது. தமது வாழ்க்கைத் தலைவரது சமயம், மொழி, கலாசாரம் முதலியவற்றை மேற்கொண்டு அவரது பணிக்குத் தம்மை அர்ப்பணித்தார் அவ்வம்மையார்.

இராமநாதன் கல்லூரியின் தலைவராகப் பதவி வகித்ததுடன் அதிபர் இல்லாத காலங்களில் அதிபரின் கடமையையும் ஆற்றி கல்லூரியின் பணி தொடர உறுதுணையாக இருந்தார். 27. 11. 1927 இல், காந்தியடிகள் இராமநாதன் கல்லூரிக்கு வருகை தந்த போது அம்மையாரின் கல்விச் சேவையை அவதானித்த காந்தி அடிகள், ''வருடாவருடம் தமது வருகையினை விழாவாகக் கொண்டாட இராமநாதன் கல்லூரி தீர்மானித்து, அத்தினத்திலே கதர்த்தொழிலுக்கு நிதி திரட்டப்போவதாக வரவேற்புரையிற் குறிப்பிட்டது எனது உள்ளத்தை தொட்டு நிற்கின்றது''[21] என்று அம்மையாரின் பண்பிற்கு மதிப்பீடு தருகின்றார்.

கல்விப்பணியுடன், கல்வி சார்ந்த சமூகப்பணியிலும் இவர் ஈடுபட்டார். இராமநாதன் எண்பதாவது வயது வரை பல்துறைப்பணிகளிலும் விளங்க அம்மையார் அருந் துணைவியராக இருந்தார். இவரின் பணிகளைப் பாராட்டுமுகமாக இலங்கைப் பல்கலைக் கழகம் 1922 ஆம் ஆண்டில் அவருக்கு இலக்கியக் கலாநிதிப்பட்டம் சூட்டிக் கௌரவித்தது குறிப்பிடத்தக்கது. கல்லூரிகளின் பயன்பாட்டை அதிகரிக்க அம்மையார் தொடர்ந்து பணியாற்றிச் சைவப் பெண்களுக்கு அரும்பணியாற்றி 31. 01. 1953 இல் மறைந்தார்.

''இராமநாதனின் பிற்கால வாழ்வின் வாழ்க்கைத் துணைவியாகி அவரின் வாழ்வின் இன்பதுன்பங்களிற் பங்கு கொண்ட சிறந்த பண்புகள் படைத்த திருமதி இராமநாதனுக்கு

நாம் மதிப்புக் கொடுப்பதில் இருந்து தவறுவது எமது கடமையிலிருந்து தவறுவதாகும்''. ''தான் பிறந்த நாட்டிலிருந்து எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உள்ள நாட்டிற்குத் தம்மையும் தமது சேவையையும் அர்ப்பணித்தார் அவ்வம்மையார்''.[22] என்று லீலாவதி இராமநாதனையிட்டு குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

இந்நாட்டில் தம் கல்வியால், வாக்கால், எழுத்தால் சீலத்தால், தீர்க்கதரிசனத்தால் ஒப்பற்ற தேசத்தொண்டால் ஒரு புதுயுகத்தையே மலரவைத்தவர் சேர். பொன். அருணாசலம் (1853 - 1924). அவர் ''இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தந்தை எனப் போற்றப்பட்டார்....''[23] என்ற கருத்தில் அவர் இந்நாட்டில் பல்கலைக்கழக இயக்கத்திற்குத் தந்தையாகத் தலைமை வகித்து அவ்வியக்கத்தை வென்றுதர உழைத்தார் எனும் கருத்தைப் பெறுகின்றோம். ஆங்கில மொழி, இலக்கியம், மேல்நாட்டுக் கலாசாரம் என்பவற்றைக் கற்பதற்குத் தேவையான சாதனங்களை அமைப்பதுடன் எங்களுடைய இளைஞர் தம் தாய்மொழி, பாரம்பரிய வரலாறு, மரபு ஆகியவற்றையும் அறியச் செய்வதே இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பிரதான நோக்கம். அப்பொழுதுதான் தாய்மொழி, மேற்கத்தைய, கிழக்கத்தைய கலாசாரத்தின் சிறப்பு இயல்புகள் முதலியவற்றை நம்மிடையே பரவச் செய்வதற்குத் தகுதி வாய்ந்த ஒரு கருவியாக அமையுமென்று சேர் அருணாசலம் கருதினார்.

தாய்மொழி மூலம் போதிக்கப்படலின் அவசியத்தை அன்று வலியுறுத்தி, ''1900 யூலை 8 ம் திகதி கல்வித்திணைக்களத்திற்கு ஒரு மனுவை அனுப்பினார். அந்நிய மொழியிற் கல்வியைப் போதித்தல் தாய் நாட்டிலே பிள்ளைகளை அந்நியப்படுத்தலாகும்''[24] என இங்கு வலியுறுத்தினார்.

19. 10. 1906 இல் அவர் நிறுவிய பல்கலைக்கழகச் சங்கம் தேசிய கலாசார மறுமலர்ச்சிக்கான மையமாக விளங்க வேண்டும்; பல்கலைக்கழகக் கலைத்திட்டமானது கீழைத்தேயப் பாரம்பரியத்தில் நம் நாட்டின் தேவையையும், விருப்பையும் நிறைவு செய்ய வேண்டும்; உயர்கல்வி பரவலாக்கப்பட வேண்டும் எனவுங் கொண்டார். தேசிய மறுமலர்ச்சிக்குப் பல்கலைக்கழகம் ஆற்றவேண்டிய பணிகள் என்பதில் அருணாசலம் மிகவும் தெளிவான கொள்கைகளை முன்வைத்தார்.

இலங்கையில் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த முன்னோடிகளில் ஒருவராக ஆனந்தக் குமாரசாமி (1877 – 1947) அவர்களும் விளங்குகிறார். சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகச் சங்கத்தின் ஆரம்ப விழாவிற்கு இவரும் அழைக்கப்பட்டார். இவ்விழாவிற்குச் சமுகம் அளிக்க முடியாது போன ஆனந்தக் குமாரசாமி தமது நோக்கத்தைக் கடிதத்திற் குறிப்பிடுகின்றார்.

''1-1-1906 இன்று மக்கள் விரும்பும் மேலைநாட்டுக் கல்வியைத்தான் நடைமுறைப் படுத்துவதாயின் அவ்வாறான பல்கலைக்கழகம் தேவையற்றதாகும். கீழைத்தேயப் பண்பாடு, இசை, கலை, மொழி ஆகியவற்றைப் பெறக்கூடிய வகையில் பல்கலைக்கழகம் உருவாக வேண்டும். இப்பல்கலைக்கழகம் கீழைத்தேய, மேலைத்தேயப் பண்பாடுகள் சங்கமிக்கும் இடமாகவும் இருத்தல் வேண்டும்''.[25]



லீலாவதி இராமநாதன் பெருமாட்டி

*Lady Lilavati Ramanathan*

இலங்கை மக்களின் முன்னேற்றம் வேண்டி 29. 7. 1905 இல் இலங்கைச் சமூக சீர்திருத்தச் சங்கத்தை ஆரம்பித்து அதன் தலைவராகவும் அவர் செயற்பட்டார். இச் சங்கமும் பல்கலைக்கழகத்தின் நோக்கத்தினை எடுத்தியம்பியது. நமது நாட்டுமக்கள் சுதேசப் பண்பாட்டைப் பேண வேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்து வந்தார். எமது கலாசாரத்தின் மகிமை உணரப்படாமல் இருத்தலைக் கண்டு மனம் வருந்தினர். தாய்மொழி மூலம் கல்வி போதிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியவர் இவர். இனங்களுக்கிடையே நல்லெண்ணத்தையும் இணக்கத்தையும் ஏற்படுத்தவேண்டும் என்பதும் இவரது இலட்சியமாகும்.

இவர் 1906 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆற்றிய உரையில் தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டினையிட்டும், தமிழ்மொழியின் தொன்மையையிட்டும் குறிப்பிட்டு, கீழைத்தேய மரபுகளையும், தேசிய விழுமியங்களையும் பேணிக்காப்பது நமது கடமை எனக் கூறியுள்ளார்.''[6] ஆனந்தக் குமாரசாமியவர்களின் கருத்துக்கள் அவரின் தேசிய உணர்வைப் புலப்படுத்தி அதற்கு அமைவான தேசிய கல்வித் திட்டத்தைச் சிந்திப்பனவாகவும் அமைகின்றன.

## 4. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நோக்கும் செயற்பாடுகளும்

இந்நாட்டில் மிகப் பெரிய இந்துக்கல்வி நிறுவனமாகவும், இயக்கமாகவும் விளங்கியது சைவ வித்தியா விருத்திச்சங்கம். இச்சங்கத்தின் வளர்ச்சியும், தோற்றமும் ஈழத்து இந்துக்கல்வி இயக்கங்களுக்கு மேலும் புத்துணர்ச்சியை அளித்தன.

இந்துக்களின் கல்வியைப் பாதுகாக்கும் நோக்குடனும், வளர்க்கும் கருத்துடனும் சேர் பொன்னம்பலம் இராமநாதன், திருவாளர்கள் டபிள்யூ. துரைசுவாமி, சைவப்பெரியார் எஸ். சிவபாதசுந்தரம், திருவாளர்கள் எஸ். இராசரத்தினம், எம். எஸ். இராசரத்தினம் ஆகியோரின் கூட்டுமுயற்சியால் 1923 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இச்சங்கம் நிறுவப்பட்டது.

சைவவித்தியாவிருத்திச்சங்கத்தின் தந்தை எனக்கொள்ளப்பட்ட இராமநாதன் 'ஓர் இனமக்கள்' 'ஒரு நாட்டு மக்கள்' உயர்ச்சி பெற வேண்டுமாயின் கல்வியின் மூலமே அது செயற்பட முடியும்; ஒரு மனிதனின் ஆளுமையின் நான்கில் மூன்று பங்கு, அவனது சொந்தச் சமயத்தாலேயே உருவாக்கப்படுகின்றது என்று கூறினர்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்தில், கல்வி முதன்மை இடம் பெறுதல் வேண்டும். கல்வி நிலையங்கள் புனருத்தாரண நிலையங்களாக விளங்க வேண்டும். தமிழ்ப் பள்ளிக்கூடங்களும், துவிபாஷா பள்ளிக்கூடங்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கிராமங்கள் தோறும் அமைக்கப்படல் வேண்டும் எனும் கருத்துகளை முன்வைத்தார்கள்.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பணிகள் சமூக மாற்றத்தைக் கருத்திற்கொண்டும், சமூக ஏற்றத்தாழ்வுகளின் அறைகூவல்களையும் கல்விமூலம் அணுகிக்கொண்டும் சென்றமையைக் காணலாம்.

'யாழ்ப்பாணத்தின் இந்துக்கல்வி இயக்கம், கிறிஸ்தவர்களுக்கோ அல்லது வேறு யாருக்குமோ எதிரான இயக்கமன்று'[27] என்ற கருத்து, சைவ வித்தியாவிருத்திச் சங்க இயக்கங்களின் சமூக உணர்வு கொண்ட, விரிந்த தத்துவப்பார்வையை எடுத்துக்காட்டு கின்றது.

இச்சங்கக் குழுவினர் நாட்டில் நிலவிய பொதுவான கல்வி அமைப்பின் பின்னணி யில் இந்துப் பள்ளிக்கூடங்கள் அனுபவித்த தாக்கங்களைக் கருத்திற்கொண்டு இந்து சமய மும், கல்வியும் ஒன்றிணைந்து வளர வேண்டுமென்ற உணர்வினை வெளிப்படுத்தி, அக் காலத்தில் இயங்கிவந்த இந்துப்பள்ளிக் கூடங்களை வலிமைப்படுத்தவும், அத்தியாவசிய மான இடங்களிற் பள்ளிக்கூடங்களைத் திறக்கவும் எண்ணினர்.

யாழ்ப்பாண மாவட்டத்திலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலுமுள்ள நிறுவனங்களை ஒன்று திரட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

இச்சங்கம் நிறுவப்படுமுன்னர் இந்து இயக்கங்கள் செயற்பட்டபோதிலும் அவை பரந்து பட்ட சமூக நிறுவனங்களாக அமையவில்லை. இச்சங்கத்தின் ஆரம்பப் பணி கிரா மங்களில் உதயமானதும் மனதிற் கொள்ளப்பட வேண்டும்.

மக்களின் ஆதரவையும் உதவியையும் பெற்றுக்கொண்டு மாதகல் கிராமத்தில் 1924 ஆம் ஆண்டு மே மாதம் விக்கினேஸ்வர வித்தியாலயம் என்ற பள்ளிக்கூடம் முதன் முதலாக் ஆரம்பிக்கப்பட்டது.[28]

இப்பள்ளிக்கூடம் கிறிஸ்தவ சமயக்குழுவினரின் பள்ளிக்கூடத்துக்கு, 100 யார் தூரத்தினுள் அமைக்கப்பட்டது. அத்தோடு அக்கிராமத்திலுள்ள மேற்கு வீதியில் இப் பள்ளிக்கூடம் அமைக்கப்பட்டமையால், கிறிஸ்தவ பள்ளிக்கூடத்துக்குச் சென்ற சைவப் பிள்ளைகளை ஈர்க்க வல்லதாயிருந்தது.

கோயிலுக்கு அண்மையிலே பள்ளிக்கூடங்கள் அமைந்தமை மக்களிடத்து ஊறியி ருந்த சமய உணர்வுடன் கல்வியையும் இணைத்து, பண்பாட்டு உணர்வுகளைப் பலப்படுத் தும் பாங்கினையும் கொண்டதாயிற்று.

இச்சபை தோற்றுவிக்கப்பட்டு ஒரு வருடத்தினுள் 2250 பிள்ளைகளைக் கொண்ட 22 பள்ளிக்கூடங்கள் பல்வேறு பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டன.[29]

இச்சங்கத்தின் பணிகள் மக்களைத் தழுவிச் செல்லும் பண்புகளைப் பெற்று இருந் தமையால் எழுத்தறிவின்மை வேகமாக ஒழிக்கப்படவும், தமிழ்மொழி மூலக்கல்வி கிரா மங்களெங்கும் பரவவும் கூடிய இயல்புகளைப் பெற்றன.

அக்காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவிய சமூக விழுமியங்களுடன் ஒன் றித்துச் செல்லாது, 'உயர்வகுப்பினர்' என்று கொள்ளப்பட்டவர்கள், 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர்' என்று கொள்ளப்பட்டவர்கள் என்ற பேதங்களைக் கடந்து யாவருக்கும் கல்வி என்ற கருத்தினை முன்வைத்தமை, செயற்படுத்தியமை இச்சங்கத்தின் சிறப்பம்ச மாக விளங்கின.

'தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிள்ளைகளையும் பள்ளிக்கூடங்களிற் சேர்த்துக்கொள்வதன் மூலம் அவர்களுக்கு ஊக்கம் அளித்தல்வேண்டும்,' எனும் சமத்துவக் கருத்து இச் சங்கத்தால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பிள்ளைகளுக்கு ஆசனம், போசனம் முதலிய இன்னோரன்ன எத்துறையிலும் வேறுபாடு காட்டக்கூடாது என்ற தீர்மானத்தைத் தமது பள்ளிக்கூடங்களிற் செயற்படுத்தியது அக்காலத்தில், சமூகப்புரட்சி என்று கொள்ளப்பட்டது. 'உயர்சாதியினர்' என்று கொள்ளப்பட்டவர்கள் இம்மக்களுக்குச் சம உரிமையும் சமவாய்ப்பும் அளிப்பதனை மூர்க்கத்தனமாக எதிர்க்க முற்பட்டனர். சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் ஏழு பள்ளிக்கூடக் கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. தலைமை ஆசிரியர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. சில கிராமங்களிற் சம சந்தர்ப்பம் அளிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களிலிருந்து 'உயர்குலத்தோர்' என்று கொள்ளப்பட்டவர்கள் தங்களது பிள்ளைகளை, பள்ளிக்கூடங்களிலிருந்து விலக்கிக் கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களிற் சேர்த்தார்கள்.

சமூக மாற்றங்களை உருவாக்க முனைந்த கல்வி நெறியினை ஏற்றுச் செயற்படுத்த முயன்றமை கல்வியிற் சமத்துவம் என்னும் அடிப்படையில் எழுந்தது,

இச்சங்கத்துப் பள்ளிக்கூடங்களில் 1927 ஆம் ஆண்டு, 4000 பிள்ளைகள், 32 பள்ளிக்கூடங்களிற் கற்றார்கள். 1938 ஆம் ஆண்டில், பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 99 ஆகவும், மாணவர்தொகை 14,885 ஆகவும் உயர்ந்தது. 465 ஆசிரியர்கள் பணியாற்றினார்கள். 1943 ஆம் ஆண்டில், பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 111 ஆகவும், மாணவர்களின் தொகை 18000 ஆகவும், ஆசிரியர்களின் எண்ணிக்கை 525 ஆகவும் உயர்ந்தன.[30]

1958 ஆம் ஆண்டு முடிவடையும் போது இச்சபையின் முகாமையின் கீழ் 147 தமிழ்ப்பள்ளிக்கூடங்களும், 7 ஆங்கிலப் பள்ளிக்கூடங்களும், 2 அனாதை இல்லங்களும், 15 நெசவுப்பள்ளிக்கூடங்களும், 16 கூடை இழைக்கும் பள்ளிக்கூடங்களும் இருந்தன ; அவற்றுடன் ஓர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையும் இருந்தது. இக்கல்வி நிறுவனங்கள் எல்லாவற்றிலும் மொத்தமாக 3,500 மாணவர் வரையிற் கல்வி கற்றனர். [31]

அவர்களது கல்விக்கூடங்கள் கட்டணம் அறவிடாத இலவசக்கல்வி நிலையங்களாகவே விளங்கின.

'அனாதைப்பிள்ளைகளுக்கு, கல்விபெற வசதி செய்வதோடு, அவர்களை ஆசிரியர்களாக்கி, அரசாங்க உத்தியோகத்தர்களாக்கி வருவாய் பெற்று வாழச் செய்வது ..'[32] திரு. இராசரத்தினம் அவர்களின் பணியாயிற்று என்று கூறப்பட்டது. கல்வி எல்லோருக்கும் பொதுச்சொத்து என்னும் நெறியினை இச்சங்கம் செயற்படுத்தியது எனும் கருத்தினை இது வலியுறுத்துகின்றது.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினர் கல்வி, கல்விக்காக என்ற கோட்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. கல்வியைப் பல்வேறு முனைகளிலும் செயற்படுத்திச் சமூக பொருளாதாரத் தேவைகளைக் கருத்திற் கொண்டு செயற்பட்டார்கள்.

கமத்தொழிற் கல்வி இவர்களது கல்வித்திட்டத்திற் சிறந்த இடம்பெற்றது. காந்தியடிகளின் கல்வியின் தாக்கம் இப்பள்ளிக்கூடங்களின் கலைத்திட்டத்தில் இடம் பெற்றன.

கமத்தொழில், கைத்தொழில் ஆகியவற்றினைக் கலைத்திட்டத்தில் இணைப்பதன் வாயிலாகக் கலைத்திட்டத்திற் சமநிலையை ஏற்படுத்தும் பாங்கு முனைப்படையும் வேளையில், பள்ளிக்கூடத்தையும் சமூகத்தையும் இணைக்கும் தொடர்புகளும் வளர்ச்சியடைந்தன.

தாய்மொழிக்கல்வியில், சைவவித்தியாவிருத்திச் சங்கம் ஆழ்ந்த கவனம் செலுத்திய போதும், பிறமொழிகளைக் கற்பித்தலையும் தவறாது கடைப்பிடித்தது.

பலம் வாய்ந்த கல்வி நிலையமாக வளர்ந்தோங்கிய இச்சங்கம், சிங்கள மொழியைக் கற்பிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டமை தேசியக் கோட்பாடுகளின் வளர்ச்சிக்குரிய ஆக்கபூர்வமான செயற்பாடாகவெழுந்தது. ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் 'இலவச துவிபாஷா', பள்ளிக்கூடங்கள் என்பவற்றின் மூலமாக ஆங்கிலக்கல்வி வளர்ப்பதிலும் சைவ வித்தியாவிருத்திச் சங்கம் முயற்சிகொண்டது.

கல்வி நோக்கில், பன்மொழிகளைக் கற்பித்தலை நிறைவு கொண்ட பணியாகவே சபையினர் கருதினர். கல்வியின் பரந்த செயற்பாடுகளில், குறுகிய மொழிக்காழ்ப்புணர்ச்சிகள் வலுவிழக்கின்றன. தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளைக் கற்பித்தமை,[33] இந்நாட்டின் சமூக நிலையை யதார்த்தபூர்வமாக விளங்கிக் கொண்டமையைக் காட்டுகின்றது. கல்வி வழியிலே தேசிய இலக்குகள் நிர்மாணம் செய்யப்படுதலையும், மொழிச்சமரசம் உருவாக்கப்படுவதையும் சபையின் பணிகள் காட்டுகின்றன.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் இயக்கப்பின்னணியிற் பாரத நாட்டுக் கல்வி முறையின் தத்துவங்களும் இணைந்து கொண்டன.

'இந்தியக் கல்வி முறை குறைந்த பட்சம் கல்விக்கிளர்ச்சிக்கு முன்னிருந்த ஐரோப்பியக் கல்விமுறைக்கு குறைவானதன்று. கல்விக்கிரமம், இராச்சிய வீழ்ச்சிகளையும், சமூக மாற்றங்களையும் தாண்டி நின்றது. அன்றியும் இந்தியக் கல்வி முறையெல்லாம் ஆயிரக்கணக்கான வருடங்களாக உயர்தரக் கல்விச் சுடரையொளிகாலச் செய்து வந்தன. இந்தியக் கல்வியில் மாத்திரமன்றி உலகுக் கல்வியிலேயே தமது தொழிற்பாட்டை விட்டுச்சென்ற பேரறிஞர் பலரைத் தமக்குள் அடக்கி நின்றன',[34] எனக் கூறப்பட்டதிலிருந்து' பாரத நாட்டுக் கல்வி முறையின் செழுமையினையும், வலிமையினையும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் நுகர்ந்து கொண்டனர்.

சைவவித்தியாவிருத்திச்சங்கம் பள்ளிக்கூடங்களைத் தாபித்துச் செய்த சேவை முக்கியமானதாயிருந்தாலும், அதிலும் பார்க்க இன்னுமொரு சேவை சிறப்புப் பெறுகின்றது, அதுவே சைவாசிரியர் பயிற்சிக்கென ஒரு கல்லூரியை நிறுவியதாகும்.

கிறிஸ்தவ சங்கங்கள் தம் பள்ளிக்கூடங்களிற் கல்வி போதிப்பதற்குத் தேவையான ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காகப் பயிற்சிக் கலாசாலைகளையும், அப்பயிற்சி ஆசிரிய மாணவர்கள் கற்பித்தற் பயிற்சி பெறுவதற்காகக் கைத்தொழிற் பள்ளிக்கூடங்களையும் அனாதைகள் இல்லங்களை நிறுவினர்.

ஆனல், சமயம் மாருது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிற் பயிற்சி பெற்று வெளியேற முடியாத நிலை நிலவிய காலமிது. எனவே சைவர்களுக்கென ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி ஒன்றினை நிறுவுவதற்கெனக் கீரிமலையில் 1913 ஆம் ஆண்டு சபையொன்று நிறுவப்பட்டது.

சட்ட நிருபணசபை அங்கத்தவரான சேர் அ. கனகசபையின் தலைமையிலான இக்கல்விச் சபையினது நோக்கம் முற்றிலும் நிறைவேறவில்லை,

இம்முயற்சி வெற்றிகாணுத காரணத்தினுல், சேர் பொன். இராமநாதனும், சேர் அ. கனசபையும் யாழ்ப்பாணத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்றை அமைக்கும்படி அரசாங்கந்திடம் வேண்டுகோள் விடுத்தனர்.

1900ஆம் ஆண்டளவில், கிறிஸ்தவ சங்கங்கள் ஆண்களுக்கெனவும், பெண்களுக்கெனவும் தெல்லிப்பளை, உடுவில், கோப்பாய், நல்லூர், கொட்டடி, வேம்படி, கொழும்புத்துறை, மட்டக்களப்பில் அரசடி, போன்ற இடங்களில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளை நிறுவி நடாத்தி வந்தன. இக்கல்லூரிகள் சமய மாற்றத்திற்கு உடந்தையாக இருந்தன

சேர் பொன். அருணுசலம், சேர் அ. கனகசபை ஆகிய அறிஞர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் 1915 ஆம் ஆண்டில், கிறிஸ்தவ திருச்சபையினரையும், இந்துசமய அறிஞர்களையும் கூட்டிச் சகல சமயத்தினருக்கும் நிறுவுவதற்கு அனுமதியளித்தது. உரோமன் கத்தோலிக்க சங்கம் இதனை ஏறுக்கொள்ளவில்லை. எனினும் 1916 ஆம் ஆண்டு கோப்பாயில், பொது ஆசிரியர் கல்லூரி நிறுவப்பட்டது. இந்து சமய ஆசிரிய மாணவர்களுக்கு வதிவிடம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் இக்கலாசாலையிலும், கிறிஸ்தவ ஆதிக்கமே மேலோங்கியது.

இக்கல்லூரி ஏழு வருடங்கள் பணியாற்றிய பின்னர் 64 இந்துசமய ஆசிரியர்களே இக்காலவரையறையிற் பயிற்சியை முடித்தார்கள்.

சைவவித்தியா விருத்திச் சங்கத்தின்படி 'ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும், அனுதை இல்லங்களும், இளைஞர்களையும் ஆசிரியர்-மாணவர்களையும் சமயம் மாற்றும் நிறுவனங்களாக விளங்கின'. [35]

இச்சங்கத்தினரின் கல்விச் செயற்பாடுகள், தங்களாற் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினுலே தடங்கலாயிற்று.

எனவே, இந்துசமயக் கல்வி இயக்கத்தினர் தனித்துவம் நிறைந்த ஆசிரியர் கல்லூரி இன்றியமையாதது எனக் கொண்டு, அதனை அமைக்கச் செயற்பட்டார்கள். ஏற்கனவே இராமநாதன் கல்லூரியிலும், பரமேஸ்வரக்கல்லூரியிலும் செயற்பட்டு வந்த ஆசிரியர் கல்லூரிகள் சீரிய பயனைக் கொடுத்தன.

ஒரு பள்ளிக்கூடத்திற் கற்பிக்கும் ஆசிரியர்களில், குறைந்த பட்சம் 50% ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக இருத்தல் வேண்டும். அல்லது சான்றிதழ் பெற்ற ஆசிரியர்களாக இருத்தல் வேண்டுமெனவும் அரசினுற் கோரப்பட்டது.

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே சென்றது. இந்நிலையில் மேலும் சைவ ஆசிரியர் கல்லூரிகளின் தேவை உணரப்பட்டது

கோப்பாய் ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியர் – மாணவர் தொகை கூட்டப்பட்டாலும், இக்கல்லூரிக்கு அனுமதி பெறத் தகைமை பெற்ற 30 ஆசிரியர்கள் 1928 ஆம் ஆண்டிற் சேர்க்கப்படவில்லை.

சைவவித்தியாவிருத்திச் சங்கம் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சங்கப்பள்ளிக்கூட முகாமையாளராகவிருந்த திரு. எஸ். இராசரத்தினம் மூலம், அனுமதி பெற்ற மாணவர்களுக்கு, பயிற்சி முக்கியமாகுமெனும் கருத்தை முன்வைத்தது.

கோப்பாய் ஆசிரியர் கல்லூரியில் அனுமதி எண்ணிக்கையைக் கூட்ட முடியாது என்ற காரணத்தினுலும், சைவ வித்தியாவிருத்திச்சங்கம் ஆசிரியர் கல்லூரி அமைப்பது மிகவும் முக்கியம் என்று கொண்டதனுலும், சைவ ஆசிரியர் கல்லூரி அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்குச் சட்டசபை அங்கத்தவர்களான சேர் பொன்னம்பலம் இராமநாதன் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி, திரு. கனகரத்தினம் ஆகியோர் உத்தியோக ரீதியிலும், உத்தியோகப் பற்றற்ற முறையிலும் போதிய ஆதரவளித்தனர்.

ஆசிரியர்கள் ஒரு நாட்டின் சமய மறுமலர்ச்சியின் முன்னேடிகள் என்னும் கருத்தினைத் தத்துவமாக ஏற்றுச் சைவ ஆசிரியர் கலாசாலை 1928 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கலைமகள் விழாவன்று ஆரம்பிக்கப்பட்டது.

'சைவசமயப்பண்பாட்டுக்கும் மரபுக்கும் ஏற்றவாறு, இந்நிலையம் இயங்குமெனவும்', 'சைவநெறியின் நித்தியமான தத்துவத்தையும், சைவ ஒளியையும், சைவம் புகட்டும் கருணையையும்', பரப்பும் எனவும் கொள்ளப்பட்டது.

இச்சங்கத்தின் பள்ளிக்கூடங்களில், 'கலைத்திட்டத்தில் இடம்பெற்ற பாடங்களை மட்டும் கற்பிப்பதோடு நின்று விடாது, நாவலர் தந்த சமயக் கோட்பாடுகளையும் செயற்பாடுகளையும் கற்பிக்க வேண்டுமென்றும் கொள்ளப்பட்டது'.

22 மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வி நிலையம் சைவமறுமலர்ச்சியின் நிலைக்களனக விளங்குவதோடு, தமிழ்மொழியின் நிறைவுக்குச் செயற்பட வேண்டும் எனவும் இக்கல்லூரி நிறுவுநர்கள் கொண்டார்கள்.

கிறிஸ்தவ சமயத்தைத் தழுவாது ஆசிரியர்கள் பயிற்சி பெறலாம் என்பதும் இந்நிறுவனம் மூலம் உறுதி செய்யப்பட்டது.

1928 ஆம் ஆண்டு தொடக்கம், 1934 ஆம் ஆண்டுவரை 149 ஆசிரியர்கள் பயிற்றப்பட்டார்கள். 1929 ஆம் ஆண்டு தொடக்கம் 1951 ஆம் ஆண்டு வரை திரு சி. எஸ். சுவாமிநாதன் அதிபராகக் கடமையாற்றினர். இக்காலகட்டத்தில் ஏறக்குறைய 600 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுர்கள்.

ஆசிரியத் தொழில் பற்றிய கோட்பாடுகளிலும், பயிற்சியிலும் சபை கவனம் செலுத்தியது ; ஆசிரியத்துவத்தின் மாண்புக்கு உயர்ந்த இடம் அளித்து ; அவர்களது பணியில் விசுவாசம் காட்டியது.

ஆசிரியர்களின் பணிகளை, சமூகப் பின்னணியில், சமூகத் தொடர்புகளை அடிப்படையாக வைத்து, சங்கம் மதிப்பீடு செய்தது.

'நமது ஆசிரியர்கள் தங்கள் வேலையில் உயர்தரத் திறமையைக் கொண்டு தொடர்ந்து பேணிவருகின்றுர்கள். கிராமங்களில் அவர்கள் ஊராரோடும் பெற்றுரோடும் நடந்து கொள்ளும் விதம், முறை பொதுவாகப் பாராட்டத்தக்கதாய் இருந்து வருகின்றது. சங்கத்துக்கும், அதன் இலட்சியங்களுக்கும் அவர்கள் காட்டும் விசுவாசம் புகழ்தற்குரியதாகும்,' எனும் கூற்று சங்க ஆசிரியர்களின் சேவை மனப்பான்மையை எடுத்துக் காட்டுகின்றது.

ஆசிரியர் பயிற்சியில் நாடு தழுவிய பரந்த கொள்கைகளைக் கொண்டிருந்த சபையினர், ஆசிரிய பயிற்சி நிலையங்களின் சமயமாற்ற நடவடிக்கைகளைக் கண்டித்ததுடன் சமயக்காப்பு நடவடிக்கைகளைப் பள்ளிக்கூட மட்டத்திலிருந்து பயிற்சிக் கலாசாலை மட்டத்திற்கும் உயர்த்தினர்.

அதே வேளையில், சைவாசிரிய கலாசாலைக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் தொகை அரசினுற் கட்டுப்படுத்தப்பெற்றதனுல், சைவ மாணவர் கிறிஸ்தவ கலாசாலைகளிற் சேரும் நிலை நேரிடுகின்றது என்று சங்கம் தெரிவித்த கருத்தும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

திருநெல்வேலியில் நிறுவப்பட்ட ஆசிரிய கலாசாலை பாட அறிவு, கற்பிக்கும் திறன் ஆகிய இரு துறைகளிலும் கவனம் செலுத்தியது. கலை, அறிவியல், முருகியல் ஆகிய பல் துறைப்பட்ட அறிவையும் அவற்றைக் கற்பிக்கும் முறைகளையும் கற்பித்தது.

இத்தோடு இலங்கையில், உருவாகிய தேசிய இலக்கிய மறுமலர்ச்சியிற் பங்கு கொண்டதையும் அறியமுடிகின்றது.

இம்முயற்சியில் மூதறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களும் பெரிதும் பங்கு கொண்டார்கள். பண்டிதமணி அவர்களின் ரசிகத்தன்மையும், அவருடைய படிப்பிக்கும் ஆற்றலும், சொற்பொழிவுத்திறனும் அங்கே படித்த மாணவர்களையும், அவர்களாற் பரம்பிய மாணவ வர்க்கத்தையும் இறுகப்பற்றிக்கொண்டது.[36]

பழம் பெரும் இலக்கியங்களைச் சுவைக்கும் அவாவோடு, புதிய இலக்கியங்களை ஆக்கவேண்டுமென்ற துடிப்பும், கலாசாலை மாணவர்களிடத்தே வேரூன்றி வளரும் சூழலும் தோன்றலாயின. இசை, நடனம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் உற்சாகம் அளிக்கப்பட்டது.

ஆசிரியர்கள், அரசினர் அங்கீகாரம் கிடைத்து, சம்பளம் வழங்கப்படும் வரை கைம்மாறு கருதாது தமது உழைப்பை வழங்கினர்.

சைவ ஆசிரியர் நிறுவனத்தைத் தொடங்கியதன் மூலம் சைவக்கல்வியின் பரவலுக்கு அத்தியாவசியமான தேவை ஒன்று நிறைவு செய்யப்பட்டது. அந்த நிறுவனம் பின்னர் அரசாங்கம் பொறுப்பேற்றதையிட்டு மூடப்பட்டாலும், அது பயிற்றிய ஆசிரியர்களின் பணி மூலமே அக்காலத்திற் சைவக்கல்வி சக்தியுடன் இயங்கக் கூடியதாயிற்று

இந்நாட்டிற் பணிபுரியும் ஆசிரியர் எல்லோரும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக இருக்கவேண்டுமென்ற கருத்து இந்நாட்டு அரசினல் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். இது நிறைவேற்றப்படுமேயானல் நமது கல்வி வளர்ச்சியில் இது மிகவும் சிறந்த அம்சமெனக் கொள்ளலாம். பொதுவுடைமை நாடுகளில் ஆசிரியர்கள் எல்லோரும் பயிற்சி பெற்றிருக்க வேண்டுமென்பது அடிப்படைக் கல்விக் கொள்கையாகும். அவுஸ்திரேலியாவிலும், இஸ்ரேலிலும் எல்லா ஆசிரியர்களும் பயிற்சி பெற்றவர்கள். ஐக்கிய இராச்சியத்தில், பயிற்சி பெற்ற ஆசிரியர் சேவையே அந்நாட்டின் இலட்சியமாகவுள்ளது.

இலங்கையில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஆசிரியர்கள் பணி புரிகிறுர்கள். ஆனல் இதில் 50 வீதத்தினர் மாத்திரமே பயிற்றப்பட்டவர்கள். ஏனையோர் பயிற்றப்படுவதற்கு ஆசிரிய தொழிற்றுறைக் கல்லூரிகள், அகில இலங்கை அடிப்படையில், கணிசமான அளவு அதிகரிக்கப்படல் வேண்டும்.

இந்நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கென வடமாகாணத்தில் இரு ஆசிரியர் கல்லூரிகளும், கிழக்கு மாகாணத்தில் ஒரு கல்லூரியும், மலையகத்தில் ஒரு சிறிய கல்லூரியுமே உள. ஆசிரியர் கல்லூரிகளின் எண்ணிக்கை கூட்டப்படுதல் முக்கியமாகும். வடக்கு, கிழக்கு இலங்கையில், கல்வியில் வளர்வுற்று வரும் பிரதேசங்களான வவுனியா, முல்லைத்தீவு மன்னுர், திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் ஆசிரியர் கல்லூரிகள் அமைக்கப்படுவது பயன் தரும்.

அண்மையில் இலங்கையிலே பல்கலைக்கழகங்களுக்கும், ஆசிரியர் கல்லூரிகளுக்கும் இடைநிலையில், கல்விக்கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கொள்கை ஏற்கப்பட்டுள்ளது.

ஆனல், சிங்களமொழி ஆசிரியர்களுக்கென ஏழு கல்விக் கல்லூரிகள் நிறுவப்பட்டபோதும் தமிழ் மொழி ஆசிரியர்களுக்கெனக் கல்விக்கல்லூரிகள் இன்றும் அமைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடவேண்டியதாகும்.

ஆசிரியத்துவ உளமாட்சி, ஆசிரியர் கல்லூரிகள் மூலம் வளர்க்கப்பட வேண்டும். பலதரப்பட்ட உளப்பண்புகளையும், மனவெழுச்சிப் பண்புகளையும் உள்ளடக்கியதாக, பல்வேறு மாண்புகளையும் வளர்ப்பது ஆசிரித்துவ உளமாட்சியை வளர்க்க உதவும். ஆசிரியர்களைப் பொறுத்தவரை உளமாட்சி என்னும் பண்பு அன்பின் சால்பு கொண்டதாய் வலுநிறைந்த சக்தியாய் விளங்குகின்றது.

ஆசிரியரின் உளமாண்பினை விருத்தியாக்க ஆசிரியர்களுக்குத் தமது தொழிற்றுறையில், சிறப்பான முறையில், தனிமனித சீராக்கம் பெறக்கூடிய படிமுறைகள் பல இருத்தல் வேண்டும். இது அவர்களின் தொழிற்றிறன் விருத்திக்கும் பல வழிகளில் உதவுவதாய் அமைதல் அவசியம்.

ஆசிரியர் தொடர்ந்தும் கற்பவராக, அறிவைத் தேடுபவராக விளங்குதல் வேண்டும்.

## 5. இராமகிருஷ்ண சங்கமும் கல்வி மறுமலர்ச்சியும்

இந்துசமயம் எல்லாச் சமயங்களுக்கும் அன்னை; அது ஒருவரையொருவர் ஏற்றுக் கொண்டு ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுங்கள் என்று போதிப்பது. மனிதன் தெய்வாம்சம் பொருந்தியவன்; அவன் இடையுறாத வளர்ச்சி கண்டு ஏற்றம் காண்பதற்கான தகுதியுடையவன். அத்தகைய சமயத்தை உலகுக்கு வழங்குதல் வேண்டும்.

இதனை இந்துசமயம் அளிக்கின்றது. தூய்மை, ஞானம், கருணை ஆகிய குணவியல்புகள் ஏகபோகமான உரிமைகளல்ல.

ஒவ்வொரு சமயக்கொடியிலும் உதவிக்கொள்ளுங்கள். சண்டையிடாதீர்கள் தகராறுகள் தேவையில்லை; உருவாக்குங்கள்; அழித்துக் கொள்ளாதீர்கள் என்று சமய ஒற்றுமையை வலியுறுத்திய மகாநாட்டில் சுவாமி விவேகானந்தர் (1863 - 1902) குறிப்பிட்டார். இம்மகாநாடு 1893 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி சிக்காகோவில் நிகழ்ந்தது.

இராமகிருஷ்ணசங்கம் மனிதகுலத்தின் நன்மைக்காக, உயர்வுக்காக இராமகிருஷ்ண தேவர் உபதேசித்த, தமது வாழ்க்கையில் அனுஷ்டித்து வந்த, உண்மைகளைப் பரப்புதல் வேண்டும்; மக்களின் மன, மெய், மொழி வளர்ச்சியில் இராமகிருஷ்ண நெறியினை அனுஷ்டிக்கத் துணைபுரிதல் வேண்டும்; அத்தோடு வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றுவோரிடையே தோழமையை ஏற்படுத்த, தத்துவ அடிப்படையிலும் நிறுவன அடிப்படையிலும் முயற்சித்தல் வேண்டும்.[37]

ஞானங்களையும், விஞ்ஞானங்களையும் போதிப்பதற்கு, தகுதியுள்ள மக்களுக்குப் பயிற்சியளித்து, ஆயத்தம் செய்து, கலைகளையும், தொழில்களையும் ஊக்குவித்து வளர்த்து, பிறநாட்டுக் கேந்திரங்களுக்கும் பாரத நாட்டுக்கும் இடையே நெருங்கிய உறவு முறையை அமைத்துக் கொடுத்து அவை பரஸ்பரம், அனுதாபத்துடன் உணர்வைத் தோற்றுவித்தல் வேண்டும், என்பன இச்சங்கத்தின் நோக்கங்களாகும்.

சமுதாய நலனுக்காக, கல்வி வளர்ச்சிக்காக மனித வர்க்கம் அனைத்துமே உய்யக் கூடிய வகையில், தருமப்பிரசாரம் செய்யும் தன்மையுள்ளதாக இச்சங்கம் விளங்கிற்று.

1897 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் 15 ஆம் நாள், தமது ஆங்கிலச் சீடர்களோடு, சுவாமி விவேகானந்தர் கொழும்பு வந்து சேர்ந்தார்கள். கொழும்புத் துறைமுகத்திலே திரண்டிருந்த மக்கள் கூட்டம் அவருக்கு வரவேற்பளித்தது. இவ்விழாவுக்குப் பின்னணியில் நின்ற அறிஞர், அரசியல் மேதை இராமநாதன் சகோதரர்களுக்கு முன்னேடியான இலங்கைத் தமிழர் பொன்னம்பலம் குமாரசாமி அவர்களாவர்.[38]

கொழும்பு விழாவிற்குப் பின்னர் கண்டி, மாத்தளை, அனுராதபுரம் வழியாக, சுவாமிகள் யாழ்ப்பாணம் வந்தார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஜனவரி மாதம் 25ஆம் நாள் அவரது சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அவர் நிகழ்த்திய உரைகளுள் இது மிகவும் சிறந்த உரை என்று கொள்ளப்படுகின்றது.

‘‘மக்கள் தூய்மை, தானம், சாந்தம் ஆகிய சீரிய குணங்களில் உயர்ந்த நிலையை
அடைய வேண்டும்; கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு முதலிய எல்லாத் திசைகளிலும்,
உலகமெல்லாம் பரவி வரும் தத்துவ உண்மைகள் பாரத நாட்டிலே தோன்றின. தத்
துவ அமிர்தத்தை வெள்ளப் பெருக்காகப் பாரதநாடு கொடுத்து வருகின்றது. இந்த
நாட்டு மக்கள் ஆத்மீகச் சிந்தனையிலும், தெய்வீகச் சிந்தனையிலும் சிறந்து விளங்குகின்
றார்கள்’’[8] என்றும் கூறிய சுவாமிகள், தெய்வ நம்பிக்கை, பகுத்தறிவு வாதத்திற்கு
எதிரிடையானதல்ல என்றும் இச்சங்கம் கொண்டது; ஆன்மீகத் துறையிலும், அறிவி
யற்றுறையிலும், பொருளாதாரத் துறையிலும் இந்நிறுவனம் ஒற்றுமை கொண்டது’’
என வலியுறுத்தினர்.

‘‘அதேவேளையில், ‘நெடுங்காலமாக நாம் பொருமையில் மூழ்கிக் கிடக்கின்றோம்.
ஒருவனுக்கு என்னிலும் ஏன் கூட மரியாதை கிடைக்கின்றது? கடவுள் ஆராதனை நடக்
கும் இடங்களிற் கூட நாம் ஏன் மற்றவர்களுக்கு முன் நிற்க விரும்புகிறோம்? இதை
விடக் கேவலமான அடிமை உணர்ச்சி வேறு என்ன இருக்க முடியும்?,[10] என்றும் சுவாமி
களால் வினா எழுப்பப்பட்டது.

சுவாமியவர்கள், தாயகம் திரும்பியபின்னர், சங்கத்துறவிகள் சுவாமி சிவா
நந்தர், இராமகிருஷ்ணநந்தர் போன்ற துறவிகள் வந்தார்கள். தென் பாரதத்தில், சங்
கப் பணியாற்றிய சுவாமி சர்வானந்தரும் பல தடவைகள் வந்தார்கள்.

சங்கத்துறவிகளின் உரைகள் சொற்பொழிவுகளாக மட்டும் விளங்காது நாட்
டன்பு, கல்வியின் பயன் சமூக சேவை போன்ற கருத்துகளையும் கொண்டு விளங்கின.

துறவிகள் வருகையால், பல விவேகானந்த மன்றங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம்,
மட்டக்களப்பு, திருகோணமலை, மாத்தளை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் நிறுவப்
பட்டன. இவை ஆத்மீக, சமூக, முறைசாராக்கல்வி நிலையங்களாக விளங்கின.

பள்ளிக்கூடங்களும் தோன்றி, சமய சமரச நெறியினைப் போற்றி வளர்த்தன.
விபுலானந்த அடிகளே இந்நாட்டின் முதல் இராமகிருஷ்ணத் துறவியாவர்.

வட இலங்கையில் நான்கு கல்லூரிகளும், கிழக்கிலங்கையில் முப்பது கல்லூரிகளும்,
ஊவா மாகாணத்தில் ஒரு கல்லூரியும் சங்கக் கல்லூரிகளாக உதயமாகின.

இந்துக் கலாசாரத்தின் மேம்பாட்டினை நவீன முறையில் உலகுக்கு எடுத்துக் காட்
டிய பெருமை இச்சங்கத்தைச் சாரும்.

வைத்தீஸ்வர வித்தியாலயமே இந்நாட்டின் முதல் உதயமான இராமகிருஷ்ண
கலைக்கூடமாகும். சைவசமயம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் இங்கு கற்பிக்கப்பட்டன.

கிழக்கிலங்கையில், சிவாநந்த வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரி
ஆகிய கல்லூரிகள் இந்துசமயம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களைக்
கற்பித்தன.

## 6. இந்து சமய பண்பாட்டுப் பல்கலைக்கழகம்

இந்நாட்டின் தெற்குப் பகுதியில் வித்தியோதய, வித்தியலங்காரப் பல்கலைக்கழகங்கள் பௌத்த சமய கலாசார பல்கலைக்கழகங்களாகத் தோற்றமெடுத்தபோது, இந்துப்பல்கலைக்கழகமும் அமைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளும் முன் வைக்கப்பட்டது.

சு. நடேசன் அவர்கள் இத்தகைய இயக்கத்திற்குத் தலைமை தாங்கினர். இது ஒரு குழுவாக இயங்கியது. யாழ்ப்பாணத்து இந்துக்கல்லூரிகளின் அதிபர்கள் சிலரும், முகாமையாளர் சிலரும், இந்து சமயத் தலைவர்கள் சிலரும் இக்குழுவிற் சேர்ந்து கொண்டனர். அதே நேரத்தில் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சு. நடேசன் தமது இந்துப் பல்கலைக்கழக இயக்கத்தின் செயற்பாட்டை முன்வைத்து, தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தின் முயற்சிகளுக்கு இடையூறு ஏற்படுத்த முயன்றுரெனக் கூறப்பட்டது.

1959 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி திருகோணமலையில் முழுமையான ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படுவதைத் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் விரும்புகிறார்கள் என்று அரசியற் கட்சிகள், அறிஞர்கள். மதகுருக்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், 98 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டு மனு ஒன்றை அனுப்பினார்கள்.

> "இந்துப் பல்கலைக்கழகம் என்று திரு. சு. நடேசன் அவர்கள் கோருவது மதத்தைக் காட்டி இனத்தைப் பிரிக்கும் முயற்சியாகுமென்று கருதப்பட்டது. தமிழ் பேசும் மக்களில் இந்துக்களல்லாதோரும் இருக்கும் போது குறுகிய நோக்குடன் ஒரு இந்துப்பல்கலைக்கத்தை நிறுவ முற்படுவது இனத்தைக் கூறு போடும் முயற்சியென்றும், நிறுவப்படும் பல்கலைக்கழகம் தமிழர் எல்லோருக்கும் பயன்படக்கூடியதொன்றாகத் திகழ வேண்டும் என்றும் பிரிவேனுப் பல்கலைக்கழகங்கள் வழங்கி வரும் கலைமாணி (திரிபிடகம்), முதுமாணி (திரிபிடகம்), இலக்கியக் கலாநிதி, தத்துவகலாநிதி, போன்ற பட்டங்கள் தமிழ் மக்களைச் சாந்தி செய்யா" [41] என்றும் பல்கலைக்கழக இயக்கத்தினர் பிரசாரம் செய்தனர்.

மேலும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த வித்துவான்களும், "இந்துப் பண்பாட்டுப் பல்கலைக்கழகம் வேண்டியதில்லை" என்றும், "தமிழ்ப் பண்பாட்டுக் கழகமே உருவாக்கப்பட வேண்டும்" என்றும் குரல் கொடுத்தனர். [42]

கல்வியாளர்களும், மக்கள் தலைவர்களும் தமது கருத்திலும் முயற்சிகளிலும் திருப்திப்படவில்லை என்பதைப் புரிந்துகொண்டு தமது நிலைப்பாட்டை விளக்கி 6.11.1959 அன்று 'ரைம்ஸ்' செய்தித்தாளிற்கு எழுதிய பின்வரும் கடிதத்தை சு. நடேசன் அனுப்பி வைத்தார்.

"என்னைத் தலைவராகக் கொண்ட பரமேஸ்வரக் கல்லூரியின் வேண்டுகோளின்படி 1959 ஆம் ஆண்டு யூலை மாதம் பிரதமர் பண்டாரநாயக்காவைச் சந்தித்தேன்.

அச்சந்திப்பின் போது யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்றும் அதனை இராமநாதன் பல்கலைக்கழகம் என்று அழைக்க வேண்டுமென்றும், அதுவே இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவுமென்றும் கூறினேன். பண்டாரநாயக்கா எனது ஆலோசனையைக் கருத்தில் எடுப்பதாகவும், பல்கலைக்கழக ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவரும் வரை என்னைப் பொறுத்திருக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.'' 43

பின்பு பிரதமர் தகநாயக்கா அவர்களிடம் நடேசன் இத்தீர்மானம் சம்பந்தமாக ஞாபகமூட்டிய போது,

''தமிழ்ப் பல்கலைக்கழகக் கோரிக்கை இந்துப் பல்கலைக்கழகம் நிறுவுவதற்குத் தடையாக இருக்கிறதே; தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கத்துடன் ஒரு பொது உடன்பாட்டிற்கு வர முடியாதா?'' 44 என்று கேட்டார். தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கத்தினரின் தூதுக்குழுவும் தகநாயக்காவை அணுகியது.

''சு. நடேசனும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தால் இலங்கைப் பல்கலைக்கழகம் போன்றதோர் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்க உதவுவேன்''45 என்று இவர்களுக்குத் தகநாயக்கா கூறியிருந்தார்.

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாகி விட்டது. சு. நடேசன் இந்நாடு அளித்த கல்விமான்களில் ஒருவர். காசிப்பல்கலைக்கழகம், அலிகார் பல்கலைக்கழகம் ஆகியன, காசி இந்துப்பல்கலைக்கழகம், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் எனும் பெயர்களால் வழங்கப்பட்டன. இதனை நோக்கிய பாரத நாட்டு அறிஞர்கள் சமயப் பெயர் தாங்கிய பல்கலைக்கழகங்கள், சமயச் சார்பற்ற நாடுகளின் கல்வி நிறுவனங்களாக அமைதல் பொருந்தாதென அறிவுரை பகர்ந்தனர். அவ்வாறே பெயர்களும் மாற்றப்பட்டுவிட்டன.

சமயச் சார்பற்ற நமது நாட்டில், சமய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முழுமை பொருந்திய பல்கலைக்கழகங்களே வேண்டப்படுவனவாம்.

இந்நாட்டில் வளம் பெற்று விளங்கும் சமய தத்துவங்களும், மரபுகளும் மொழிகளும் இடம்பெற்று, சமகாலம் வேண்டி நிற்கும் பல்கலைக்கழகங்களாக இவை இயங்க வேண்டும்.

## 7. இலவசக் கல்வியும் இந்து சமயக் கல்வி மறுமலர்ச்சியும்

இலவசக் கல்வி தொடர்பான இந்துக் கல்வி இயக்கப் பூட்கைகள் தனித்துவம் வாய்ந்த ஓர் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தமை சுட்டிக் காட்டப்பட வேண்டியுள்ளது

தர மேம்பாட்டைப் பேணுத இலவசக் கல்வி இந்த நாட்டின் பெரும்பான்மையான வறியார்க்கு வழங்கப்பட்டமை விமர்சனத்திற்குரிய கல்விப் பண்பாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மக்கள் மத்தியில் இலவசக் கல்வி நடவடிக்கைகள் வினையாற்றல் கொள்வதற்கும், தர மேம்பாட்டைக் கொள்வதற்கும் இயக்கங்கள் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டன.

இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கின்றமையால் கிராமப்புறப் பள்ளிக்கூட விரிவாக்கமின்றி இலவசக்கல்வி என்பது ஏட்டளவில் இலட்சியமாகவே அமைந்து விடும்.

இலவசக்கல்வி தரமேம்பாட்டை உள்ளடக்கியதாகவிருத்தல் வேண்டும். ''தரத்திற் குறைந்த இலவசக் கல்வி'' என்பது குடியேற்ற நாட்டாதிக்க வர்க்க முறைமையின் வெளிப்பாடாக விளங்கியது. தரம்மிக்க இலவசக்கல்வியை ஏற்படுத்த ஆசிரியர் கல்வி பாடநூலாக்கம், மதிப்பீட்டு உபாயங்கள் முதலியவற்றிலும் கவனஞ் செலுத்தப்பட்டது.

''இலவசக்கல்வி'', என்ற இலட்சியம் வெற்றிபெற ''கல்வியை இலவசமாக வழங்குதல்'' மட்டும் போதுமானதன்று. மாணவரின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றி வைக்கப்படும்போது தான் அந்த ஒப்புயர்வற்ற இலட்சியம் கைகூடும். அதன் பொருட்டு, ''அன்னம், வஸ்திரம், புத்தகம்'' போன்றவற்றை இலவசமாக வழங்கும் செயற்றிட்டங்களும் பள்ளிக்கூடங்களில் ஆரம்பிக்கப்பட்டன.

கல்வியின் வாழ்க்கை தழுவிய முக்கியத்துவம் சமயப்பிரசங்க அவைகளிலே எடுத்துக் கூறப்பட்டு, சிறுவர்கள் பள்ளிக்கூடங்கள் செல்ல வேண்டிய பண்பாடு மீள வலியுறுத்தப்பட்டது. பள்ளிக்கூடம் சென்றவர்களுக்கு ஒழுக்க மரபு உரைகளிலே வற்புறுத்தப்பட்டது. பள்ளிசெல்லா வாழ்க்கை, வாழ்க்கை அன்று என்பதை விளக்கும் உபகதைகள் பிரசங்கங்களிலே முறைசாரா அனுபவங்களாக வழங்கப்பட்டன.

இந்துக்கல்வி மரபிற் காணப்படும் பிறிதொரு சிறப்பு அமிசம் இலவசக்கல்வி தொடர்பாக எழுப்பப்பட்ட வினவாகும். கல்வி இலவசமாகத் தரப்படுகின்றது; அதனைப் பெற்றுக் கொள் என்ற ஒரு பக்க நியாயத்தை மட்டும் இந்துக்கல்வி மரபு வற்புறுத்தவில்லை. இலவசமாகக் கல்வியைப் பெற்றுக்கொண்டமைக்குப் பிரதியுபகாரமாக யாது செய்யப்போகிறாய்? என்ற வினவும் எழுப்பப்பட்டது. நீ பெறும் கல்விப்பயனையும் பொருட் பயனையும் மீண்டும் பகிர்ந்துகொள். ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையயகம்'' என்ற அகில நோக்கு மாணவர்க்கு எடுத்து இயம்பப்பட்டது.

இவற்றின் நடைமுறைப் பயன்கள் உடனடியாகவும் தாமதித்தும் உணரப் பெற்றன. இலவசக் கல்வி வாயிலாக உத்தியோக வாய்ப்புக்களைப் பெற்றோர் தாம் வாழும் கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு அறக்கொடைகள் வழங்கிய பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

இந்துக்கல்வி இயக்கத்தினர் மேற்கொண்ட இலவசக்கல்வி நடவடிக்கைகள் தாய் மொழிக் கல்விக்கு வழங்கிய முக்கியத்துவத்தினால் மேலும் மேலும் வலிமை பெறலாயின.

ஒன்றரை நூற்றாண்டுக் காலப் பிரித்தானியர் ஆட்சியும், அந்த ஆட்சி வழங்கிய சமூக பொருளாதார விசைகளும் பருமட்டாக ஏழு சத வீதத்தினரை மாத்திரம் ஆங்கில மொழி அறிவுடையோராய் மாற்றியமை, [46] இலவசக் கல்விக்கும் கல்வி மொழிக்குமுள்ள மெய்மை நிலைப்பட்ட தொடர்புகளை விளக்குகின்றது. இலவசக் கல்வியும் தாய்

மொழி மூலக் கல்வியும் ஒன்றிணைக்கப்படும் பொழுது தான் யதார்த்த பூர்வமான கல்வி விரிவாக்கம் நிகழ முடியும் என்ற அனுபவ பூர்வமான செயற்பாடுகளை இந்துக் கல்வி இயக்கங்கள் வலிமைப்படுத்தி வந்தன,

சிந்தனையும் மொழியும் ஒன்றையொன்று விட்டுப் பிரியாத நிலையில் உள்ளமையால் கல்விமொழி தாய்மொழியாகவே இருக்கவேண்டும். இலவசக் கல்வியின் வெற்றி தாய் மொழித் தொடர்பினால் முழுமை பெற வேண்டியுள்ளது. கல்வி விசேடமாகத் தாய் மொழி, சமயப்பண்பு ஆகியவற்றில் உதித்து முழுமை பொருந்திய சமுதாயத்தை உரு வாக்க வேண்டும்.

## 8 தேசிய மயமாக்கலும் இந்துசமயக் கல்வி நிறுவனங்களும்

*1960* ஆம் *1961* ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பள்ளிக்கூடங்களையும், ஆசிரியர் கல்லூரிகளையும் அரசு பொறுப்பேற்ற நிகழ்ச்சி,[47] சமூக பொருளியற் காரணி களோடு இணைந்த கல்வி நடவடிக்கையாக அமைந்தது.

பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் வளர்ச்சிகொண்ட தேசியவாத உணர்வுகளும், இடதுசாரி இயக்கங்கள் முன்னெடுத்துச் சென்ற பொதுத் துறையாக்க முன்மொழிவு களும் கல்வி நடவடிக்கைகளிலே ஒன்றிணைந்தன.

இலங்கையின் தலைநகரிலே விளங்கிய புகழ்பூத்த பெரிய கல்லூரிகள் பல, பௌத்த நிறுவனங்களின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டிருந்தமை பௌத்தர்கள் மத்தியில் ஒரு வித உளவியல் நெருக்கடியை உருவாக்கியது. சுதந்திரத்தின் பின்னரும் சிங்களம் ஆட்சி மொழியாக்கப்பட்ட பின்னரும் கல்வி நிறுவன அடிப்படையிற் பௌத்தர்கள் தொடர்ந் தும் பின்தங்கியிருந்தனர் என்ற உளவியல் நெருக்கடி அவர்களிடத்து ஏற்பட்டது. மேலும் அரசாங்கத்தினால் வழங்கப்பெற்ற உதவி மானியங்களைப் பெற்றுக்கொண்டு அந்நிறுவனங்கள் இயங்கியமையும் ஒப்பியல் நோக்கிலே பௌத்த மக்களிடத்து உள நெருக்கடியை உருவாக்கியது. இந்நிலையில் உதவி நன்கொடை பெறும் பள்ளிக்கூடங்க ளையும், ஆசிரியர் கல்லூரிகளையும் அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற கல்வி எழுச் சியை ஒத்த விசை இந்துக்கல்வி இயக்கங்களிடமிருந்து ஏற்படவில்லை என்ற யதார்த் தத்தைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இதற்குப் பல காரணங்களைத் தொடர்பு படுத்திக் காட்டலாம்.

அரசியல் சமூக நெருக்கடிகளின் கவிநிலை, சமயம் என்பதிலும் பார்க்க மொழி என்ற பண்புக்குத் தமிழ் மக்களிடத்துக் கூடிய அழுத்தத்தைக் கொடுத்தது.

தனிச் சிங்களச் சட்டத்தின் தீவிர செயற்பாடுகள் நிகழ்த்தப்படும் பட்சத்தில் அரசு பொறுப்பேற்கும் பள்ளிக்கூடங்களிற் சிங்களம் புகுத்தப்படலாம் என்ற உளவியல் அச்சம் தமிழ் மக்களிடத்து நிலவி வந்தது,

பள்ளிக்கூடங்களை அரசு பொறுப்பேற்றல் தொடர்பான விவாதங்களில் தேசிய கல்வித் திட்டம், கல்வித் தர உயர்வு, சம சந்தர்ப்பம், சமவாய்ப்பு போன்ற கருத்துக்

களுக்குரிய முதன்மை வலியுறுத்தப்படாது, கத்தோலிக்க, கிறிஸ்தவ திருச்சபைகளின் கல்வி அதிகாரங்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கருத்துக்களே உரமேறி நின்றன.

இந்துக்கல்விச் சபை, சைவ வித்தியா விருத்திச்சங்கம் போன்ற நிறுவனங்கள் கல்வியிலே சுயாதீனமான முடிவுகளை எடுக்க முடியாது என்ற அச்சமும், அவர்களின் வரலாற்றுப் பணிகள் மறக்கப்பட்டு விடுமோ என்ற மன எழுச்சியும் தேசியமயத்துக் குரிய பரந்து பட்ட ஆதரவினை வழங்கமுடியாத நிலையில் இருந்தன.

மேற்கூறிய கருத்துகளை ஊன்றி நோக்கும் பொழுது தான், இந்துக்கல்வி இயக் கங்களின் தேசியமயக்கொள்கையை விளங்கிக்கொள்ள முடியும்.

தேசியமயக் கொள்கை தொடர்பான இந்துக்கல்வி இயக்கத்தினரின் கருத்துகள் சில தவறுபடவில்லை என்பதை, பின் நிகழ்ந்த கல்வி வரலாற்று நிகழ்ச்சிகள் மெய்ப்பித்தன. அவற்றுட் சில வருமாறு:

- திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை மூடப்பெற்றமை;
- வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே இயங்கிய தமிழ்மொழி மூலப் பாட சாலைகள் பல மூடப்பட்டமை;
- தோட்டப் பள்ளிக்கூடங்கள் தேசியமயத் திட்டத்திற் பலகாலமாக உள்ளடக் கப்படாமை;
- தோட்டச் சிறுவர்களின் கல்விமொழி சிங்களமாக இருக்க வேண்டுமென்று பேரா சிரியர் ஜே. ஈ. ஜயசூரியா போன்ற கல்விமான்கள் வற்புறுத்தியமை;
- கல்விநிதி ஒதுக்கீட்டிலே இனத்துவ வழிபட்ட பாரபட்சம் காட்டப்பட்டமை.

இவை களைந்தெறியப்படக் கூடிய எதிர்த்தாக்கங்களாகும். தேசியமயம் என்ற தத்துவத்தின் உட்பொருளையும், உள்ளடக்கத்தையும் விதந்து பாராட்டி அதனை உள மார வரவேற்ற இந்துக்கல்வி நெறியாளர்களும் உளர் என்பதையும் நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

## 9. மறுமலர்ச்சியின் தொடர்ச்சி

இந்து சமயக் கல்வி மறுமலர்ச்சி யாழ்ப்பாணக் குடாநாட்டிலே இந்த நூற்றாண் டில் எவ்வித வண்ணங்களைப் பெற்று விரிந்தது என்பதை நாம் இதுவரை கண்டோம் தமிழ்த் திருமுறைகளையும் சித்தாந்த சாத்திரங்களையும் சார்ந்து, வேத உபநிடத நெறி களைத் தழுவி, மக்கள் மயமான கிரியைகளுடனும் சடங்கு சம்பிரதாயங்களுடனும் கலந்து நின்ற சைவ சமயம் புறச்சமயங்களின் வருகையால் நலிந்து போய்விடுதல் கூடா தென, அக்காலத்து அறிஞர்கள் கருதினர். நலிவைத் தடுக்க எழுச்சியுடன் முனைந்தனர். அவர்களின் எழுச்சி சமயம் என்ற அளவில் நின்று விடவில்லை. அது பண்பாட்டெழுச்சி யாகவும் விரிந்தது. கல்விக்கூடங்களும் கலைக்கூடங்களும் நிறுவப்படலாயின.

கல்விச் சிந்தனையாளர்களின் பணிகள், சைவ வித்தியாவிருத்திச் சங்கமூலமும் இராமகிருஷ்ண சங்கமூலமும் சமுதாயத்திலே பரவி நற்பயன் விளைத்தன. சமயப் பண்

பாடு ஆசிரியர் கல்வி நிலையிலும் பல்கலைக்கழக நிலையிலும் முதன்மை பெறுதல் வேண்டுமென்னும் எண்ணம், அறிஞர் சிலரின் கோட்பாடாய் விளங்கியதனையும் நாம் கண்டோம். சமயங்களின் பெயரிலே பல்கலைக்கழகங்களை அமைத்தல் இன்று பொருந்தாதெனினும், சமய தத்துவங்களும் மரபுகளும் மொழிகளும் உரிய வகையிலே பயிலப்படுவதற்கும் ஆராயப்படுவதற்கும் உயர் கல்வி நிறுவனங்களிலே தகுந்த வாய்ப்புகள் அளிக்கப்படல் வேண்டுமென்பது சொல்லாமலே அமையும்.

இனி, இலவசக்கல்வி முழு வெற்றி பெறுவதற்கு, அது தாய்மொழி சார்ந்தும் சமயப் பண்பு விரவியும் இருத்தல் அவசியமென நாம் கண்டோம். அத்துடன் சகல தரப்பினர்க்கும் பொதுவாகிய, நடுநிலை வழுவாத நிர்வாகங்களின் கீழ், கல்வி நிறுவனங்கள் இயங்குவது சமய மறுமலர்ச்சியின் தொடர்ச்சிக்கு உகப்பானதாயமையுமென்பதும் கருதத்தக்கது.

## அடிக்குறிப்புகள்

1. ப. சந்திரசேகரம், கல்வியியற் கோவை, கல்விக் கழகம், யாழ். பல்கலைக் கழகம் 1987, ப. 21.
2. மேலது, ப. 22
3. மேலது, ப. 24
4. ப. சந்திரசேகரம், கல்வித்தத்துவம், கூட்டுறவுத் தமிழ் நூல் விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம், 1975, பப. 9, 10.
5. மேலது, ப. 39
6. **Central School Commission Report**, 10, 1851, p.1
7. **Sessional Paper 1867**, Appendix' to Report of Education, p. 99
8. த. கைலாசபிள்ளை, நாவலர் சரித்திரம், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை 1955, ப. 63
9. சைவபரிபாலன சபை 87வது ஆண்டறிக்கை, 1976, பப. 4, 5.
10. **Hindu Organ**, 21.06.1905, p 138, Col. 2
11. R. Lilavati, **Western pictures for Eastern Students**. London. W. Thacker & Co., Creed E. C. Calcutta and Simla, Thacker Spink and Co.. 1907. p. 109.
12. **Hindu Organ**, 7.02.1912, p. 123, Col. 3
13. **Hindu Organ**, Jan 22, 1913.
14. **Ramanathan College Magazine**, 1916, pp. 24-28.
15. **Desai Mahadev with Gandhiji in Ceylon**, Published S. Gunasena, Triplicane, Madras. 1928, p. 146
16. M. Vythilingam **The life of Ponnampalam Ramanathan**, Ramanathan Commomeration Society, Colombo, 1971. Vol. II, 1977. Thirumagal Press, Chunnakam. P. 445.
17. P. Ramanathan, **Hansard 1925**, p.183
18. **Hansard**, 1928, Vol. I, p.99

19. Principal's Report, **Ramanathan College Magazine,** 1916, p.26

20. **Hindu Organ,** 29.9.1926, **Col. 1**

21. Mahadev Desai, **With Gandhiji in Ceylon,** Op. cit. p.146

22. M.Vythilingam **The life of Ponnampalam Ramanathan.** op. cit, p. 503

23. ப. சந்திரசேகரம், 'கல்வித்தத்துவம்' முற்சுட்டிய நூல், ப.210

24. M.Vythilingam, **The life of Ponnampalam** Ramanathan, op. cit. p. 509

25. **Ceylon National Review** No. 2, July 1906, pp 126-128.

26. K. Kailasapathy, **The cultural and Linguistic Consciousness of Tamil Community in Sri Lanka.** Punithavathy Tiruchelvam memorial lecture 1982. Tamil Women's Union. Kalalaya, p.2.

27. S, Rajaratnam, "Hindu Education in Jaffna." **Report of the Hindu Board Education,** 1930, p.26

28. **RHBR..** 1927, p.14

29. **I bid.**

30. **RHBE.,** 1943, p.11

31. **RHBE.,** 1958, p.30

32. வ. நடராஜன், **"அநாதைகள் வாழ்கின்றார்கள்,"** ஈழகேசரி வெள்ளிவிழா மலர், சுன்னாகம், 1956

33. **RHBE..** 1939, p. 19

34. **RHBE..** 1943, p,12

35. **RHBE..** 1939, p.19

36. கனக. செந்திநாதன், ஈழத்து **இலக்கிய வளர்ச்சி,** அரசு வெளியீடு, கொழும்பு, 1964, ப.23

37. ப. சந்திரசேகரம், **ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தத்துவம்,** ராமகிருஷ்ணாலயம்' யாழ்ப்பாணம், 1987, ப.5

38. **மேலது** ப.6

39. **மேலது,** ப,7

40. **மேலது** ப,8

41. Report of the Ceylon University Commission, **Sessional paper xxiii of 1959,** p.77

42. I bia

43. S. Natesan, **Times of Ceylon**, 6.11.1959, Asquoted by Sinnathamby, A op. cit. (Diary)

44. **Hindu Organ.** 13.11.1959.

45. **I bid..** 18.12.1959

46. J.E. Jayasuriya, **Education in Ceylon before and after independence,** A.E. Publishers, Colombo, 1969, p.200

47. Education Act. No,5 of 1960 and Act. No.8 of 1961.

# பொது நூற் பட்டியல்


*1.* **தமிழ் நூல்கள்**

ஆறுமுக நாவலர், ஸ்ரீலஸ்ரீ. — பாலபாடம் நான்காம் புத்தகம், வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1950.

............................ ...... — சைவதூஷண பரிகாரம், வித்தியானுபாலன யந்திரசாலை, சென்னை, 1956,

கணபதிப்பிள்ளை, சி — நாவலர், சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம், 1968.

கைலாசபிள்ளை, த. — ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் பிரபந்தத்திரட்டு, ஆறுமுக நாவலர் வி.அச்சகம், சென்னை, 1954

சந்திரசேகரம், ப. — தாபகர் தின விழா உரையும், பரிசளிப்பு விழா உரையும், விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம், 1987.

................. — பரிசளிப்பு விழா உரை, இராமநாதன் கல்லூரி சுன்னாகம், 1973.

வித்தியானந்தன் சு., — தமிழியற் சிந்தனை, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம், 1979.

விபுலானந்த அடிகள் — இலக்கியக் கட்டுரைகள், கல்விவெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு, 1973.

ரோமன் ரோலாண்ட், — விவேகானந்தர், சாகித்திய அக்கடமி புதுடில்லி, 1963.

2. **ஆங்கில நூல்கள்**

Arunachalam, Sir. Pon. — **Speeches and writings,** H. W, Cave and Co. , Colombo, 1936.

Cartman. J. — **Hinduism in Ceylon,** M. D, Gunasena and Co. Ltd.. Colombo. 1957.

Chandrasegaram, P. — **The Hindu Religo Philosophical Perspective, of Education**, Dept. of Education, University of Jaffna, 1982.

Huxely, Albous, — **The perennial Philosophy,** Harper and Brother, London, (1945).

Iyampulle Chettiar, V. — **Sri Mat Swami Vivekananda's Visit to Ceylon**, H.W. Cave and Co., , Colombo 1897.

Mahadevan, T. M. P. — **Outlines of Hinduism**, Chentna Ltd., Bombay. 1960.

Radhakrishnan, S. — **An Idealist view of life**, Allen and Unwia Ltd., London, 1932.

Swami Vivekananda, — **Lectures from Colombo to Almora**, Advaitha Ashrama, Calcutta, 1978.

Ulich, Robert — **Hostory of Educational thought**, Eurasi publishing House, New Delhi, 1945.

3. **Un published Thesis**

Sivarajah, M. — **Contributions of Tamils towards the Development of the Universities in Sri Lanka.** A Dissertation submitted in partial fulfilment of the requirement for the degre- of Master of Arts in Education, Universiey of Jaffna, 1987,

சென்றபொழுது அவரும் உடன்சென்று, செயலாளர் என்ற நிலையில் வெற்றியும் புகழும் ஏற்படப் பெரிதும் முயன்ருர். அமெரிக்காவிலிருந்து திரும்பியபின் சேர் பொன். இராமநாதன் செல்வி R. L. ஹரிசனைத் திருமணஞ் செய்தார். இனத்தால் மதத்தால், மொழியால் வேறுபட்ட செல்வி R. L. ஹரிசன் சைவப்பெண்மணி யாக, எல்லோரும் ஒரு முன்மாதிரியாக விளங்கித் தமது கணவனுடைய கோட் பாடுகளை மிகநுணுக்கமாகப் பின்பற்றி வாழ்ந்தார். அன்பு, பணிவு கடமை யுணர்வு, பொறுப்புணர்ச்சி என்பன அவரிடம் காணப்பட்ட சிறப்பியல்புகளா கும். சேர் பொன். இராமநாதனின் பாரிய திட்டங்களைச் செயற்படுத்துவதிலும், கல்வி நிலையங்களை நிர்வகிப்பதிலும், விருந்தினரை உபசரிப்பதிலும், கலைகளை வளர்ப்பதிலும், மக்களை அன்பாகவும் பண்பாகவும் நடத்துவதிலும் இவர் நிக ரற்று விளங்கினுர்.

சேர் பொன். இராமநாதனுல் 1924-ம் ஆண்டு தொடக்கப்பெற்ற சைவ மங்கையர் சபையின் தலைவராக அவர் ஆற்றிய பணிகள் அளப்பில. சைவப் பெண்களுடைய உயர்ச்சிக்காக அமைக்கப்பட்ட இச்சபை இன்று நற்பணி ஆற்றி வருவது வரவேற்கத்தக்கது. லேடி இராமநாதனுடைய பலதரப்பட்ட பணிகளைப் பாராட்டி அவருக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அன்னுருடைய பணிகளை நினைவுபடுத்துமுகமாக சைவ மங்கை யர் சபையினர் இரு அறக்கட்டளைகளை நிறுவியுள்ளனர். இந்து நாகரிகத்தில் முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்கள் பெறுவதற்குத் திறமை அடிப்படையில் ஒரு புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. மேலும் வருடந்தோறும் இந்து நாக ரிகம், சமய தத்துவம், கலை, கலாசாரம் ஆகியதுறைகளில் ஒரு நினைவுப் பேருரை நடைபெற நடவடிக்கை எடுத்துள்ளது. இந்நினைவுப் பேருரை 1981-ம் ஆண்டில், பேராசிரியர் கலாநிதி பா. நடராஜன் அவர்களாலும், 1984-ம் ஆண்டில், பேரா சிரியர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களாலும், 1985-ம் ஆண்டில் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களாலும், சென்ற ஆண்டு பேராசிரியர் கலா நிதி சு. வித்தியானந்தன் அவர்களாலும் நிகழ்த்தப்பட்டது. பெருமாட்டி லீலா வதி இராமநாதன் நினைவுப்பேருரை நடைபெறச் சைவமங்கையர் சபைத் தலை வர் திருமதி இரத்தினு நவரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கை என்றும் பாராட்டப்படவேண்டிய தொன்ருகும்.

இராமநாதன் கல்லூரி,
சுன்னுகம்.

செயலாளர்,
**சைவ மங்கையர் சபை**

பல்கலைக்கழகச் சேவையைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே விரிவுரையாளராக ஆரம்பித்த பேராசியியர் ப. சந்திரசேகரம், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி, இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வித்துறைத் தலைவராகவும் கல்விப்பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார். மூன்று பல்கலைக்கழகங்களிலும் இருபத்தைந்தாண்டுகளுக்கு மேலாகக் கல்வித்துறை வளர்ச்சியிற் பெரும் பங்களிப்பினைச் செய்த இவர், மட்டக்களப்பில் மண்டூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்; 1926ஆம் ஆண்டு யூலை 17ஆம் திகதி பிறந்தவர்.



சிறந்த ஆசிரியன், கல்விமான், ஆராய்ச்சியாளன் என்ற முந்நிலைகளிலும் பலருக்கு முன்னோடியாக விளங்கும் பேராசிரியர் சந்திரசேகரம், டென்ஹாம் புலமைப் பரிசில், நடராஜா புலமைப்பரிசில், இந்திய அரசுப் புலமைப்பரிசில் ஆகிய புலமைப் பரிசில்கள் பலவற்றைப் பெற்றமையோடமையாது, இலண்டன பல்கலைக்கழகம், மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம், கேரள பல்கலைக்கழகம், கர்நாடகப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களிலும் ஏனைய பல கல்லூரிகளிலும் அதிதிப் பேராசிரியர் (Guets Professor) ஆகவும் வருகை தரும் பேராசிரியர் (Visiting Professor) ஆகவும் பணியாற்றியவர்.

கல்விசார் தொழிலில் விருப்பங்கொண்டுள்ள அனைவருக்கும் பயன்படும் வண்ணம் அவர் வெளியிட்டுள்ள கட்டுரைகளும், உலக நாடுகளில் நிகழ்ந்தக ருத்தரங்குகளிற் பங்குபற்றி அவற்றில் வாசித்தளித்த ஆய்வுக் கட்டுரைகளும் பல.

பேராசிரியர் எழுதிய நூல்களுள்ளே, கல்வித்தத்துவம், கல்விச்சிந்தனைகள், கல்வியியற் கோவை, இராமகிருஷ்ண தத்துவம் 1981 ஆம் ஆண்டுக் கல்விச் சீர்திருத்த முன்மொழிகள் மீதான மதிப்பீடு, என்பன கல்வித் துறையிலே இவர் கொண்டுள்ள ஆழமான கருத்துக்களையும்இ வரது கல்வி மேம்பபாட்டினையும் கல்விச் செயற்பாடுகளையும் எடுத்துக் காட்டுவனவாயுள்ளன.

இவற்றுடன் அமையாது இலங்கைத் தேசிய கல்விக்கழகம் பிரித்தானிய ஒப்பீட்டுக் கல்விக் கழகம்) அவுஸ்திரேலிய கல்வி நிர்வாகக்கழகம் ஆகியவற்றில் அங்கத்தவராகவும் விளங்கும் இவரை, கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகம் அகில உலக அறிஞர் குழாத்திலும் பிரித்தானிய பல்கலைக்கழகக் கல்வியாளர் குழாத்திலும் அமெரிக்கப் பல்கலைக்கழக அறிஞர்கள் தலைமைத்துவத்திலும் ஒருவராகச் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கல்வியுலகிற் கதிரொழியாகக் காட்சி நல்கும் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களுக்கு இவ்வாண்டு மணிவிழாக் கொண்டாடி மகிழ்ந்த வேளையில் இவரது ஆக்கங்களும் சேவைகளும் பெரிதும் போற்றிப் பாராட்டப்பட்டன.